# வெறுப்புணர்வுப் பேச்சை எதிர்கொள்ளல்

## சுருக்கங்கள் மற்றும் வளங்கள்

இணையவழி கருத்தரங்கு தொடர்
ஜூன் 2021

INTERNATIONAL CENTRE FOR ETHNIC STUDIES

ROSA LUXEMBURG STIFTUNG SOUTH ASIA

# வெறுப்புணர்வுப் பேச்சை எதிர்கொள்ளல் :
# பாதுகாப்பான டிஜிடல் (Digital) வெளிகளை நோக்கி

# வெறுப்புணர்வுப் பேச்சை எதிர்கொள்ளல் :
# பாதுகாப்பான டிஜிடல் (Digital) வெளிகளை நோக்கி

## சுருக்கங்கள் மற்றும் வளங்கள்

இணையவழி கருத்தரங்கு தொடர்
ஜூன் 2021

வெறுப்புணர்வுப் பேச்சை எதிர்கொள்ளல் : பாதுகாப்பான டிஜிடல் (Digital) வெளிகளை நோக்கி

© 2021 இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்
2, கின்ஸி டெரஸ்
கொழும்பு 8
இலங்கை
மின்னஞ்சல் : admin@ices.lk
URL: www.ices.lk

ISBN: 978-624-5502-10-3

இந்த வெளியீட்டின் பதிப்புரிமை இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்திற்கு (ICES) உரித்துடையதாகும். இந்த வெளியீடு அல்லது அதன் பகுதிகளின் மூலாதாரம் பெயரிடப்பட்டு ICES இற்கு தகவல் வழங்கப்பட்டு பயன்படுத்தப்படலாம். இந்த இணையவழி கருத்தரங்கு தொடருக்கு ஜேர்மன் சம்'டி குடியரசின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான மத்திய அமைச்சின் நிதி உதவியுடன் Rosa Luxemburg Stiftung (RLS) நிறுவனம் அனுசரணை வழங்கியது. இந்த வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கங்களும் முடிவுகளும் பேச்சாளர்களுடையவை, இவை ICES அல்லது RLS இனது கண்ணோட்டங்கள் மற்றும் கொள்கைகளை பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை.

INTERNATIONAL
CENTRE FOR
ETHNIC STUDIES

ROSA
LUXEMBURG
STIFTUNG
SOUTH ASIA

அச்சிடப்பட்டது :

horizon.printtingltd@gmail.com
1616/6, ஹுதரமன் சந்தி
மாலம்பே வீதி, கொட்டாவ
பன்னிப்பிட்டிய

# உள்ளடக்கம்


அறிமுகம்........................................................................................................................ 1

அமர்வு 01 : உலகளாவிய ரீதியிலான கதைகள் .............................................. 2

அமர்வு 02 : மொழியின் சக்தி ...................................................................... 11

அமர்வு 03 : பகிரப்பட்ட வரலாறுகள் மற்றும் புதிய வெளிகள் ...................... 22

அமர்வு 04 & 05 : நடவடிக்கை எடுத்தல்! டிஜிட்டல் யுகத்தில் தர்க்க ரீதியான சிந்தனை ............................................................................... 28

வளங்கள்........................................................................................................ 42

# அறிமுகம்

- இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் 2021 ஜூன் மாதத்தில் “வெறுப்புணர்வுப் பேச்சை எதிர்கொள்ளல்” எனும் தலைப்பிலான இணைய வழி கருத்தரங்குத் தொடரை நடாத்தியது.

- ஐந்து அமர்வுகளில், பேச்சாளர்கள் மற்றும் பங்குபற்றுனர்கள் சமூகத்தில் வெறுப்பு பேச்சு எவ்வாறு வெளிப்படுகிறது, பரவுகிறது மற்றும் ஆயுதமாக்கப்படுகிறது என்பதன் அகலத்தை ஆராய்ந்தனர்.

- பரந்த சமூக அமைப்பு மற்றும் நிறுவனங்கள் மற்றும் கொள்கைகளில் வேரூன்றிய பாகுபாடு வெறுப்புணர்வுப் பேச்சுக்கான பின்னணியை மூன்று சூழல்களில் அமைக்கிறது என்பதை மையமாகக் கொண்ட அமர்வுடன் இந்தத் தொடர் தொடங்கியது.

- இதனைத் தொடர்ந்து அனைத்து விதமான ஊடகங்களும் - பாரம்பரியம் மற்றும் மாற்று - எவ்வாறு வெறுப்புணர்வுப் பேச்சை ஊக்குவிக்கின்றன, அதே போல் அவை வெறுப்புணர்வுப் பேச்சை நேர்மறையாக எதிர்கொள்ள பயன்படுத்தக்கூடிய ஒரு வழியாகவும் செயல்படுகின்றன என்பது பற்றி ஆராயப்பட்டது.

- மூன்றாவது அமர்வு இலங்கையில் கலை மற்றும் கட்டடக்கலை வரலாற்றில் அடையாளங்கள் வழியாக வழிகாட்டப்பட்ட மெய்நிகர் சுற்றுப்பயணத்தின் வடிவத்தை எடுத்து, சமூகங்களின் கலாசாரங்கள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன என்பதை ஆராய்ந்தது. இது இன தேசியவாத வெறுப்புணர்வுப் பேச்சில் ஈடுபடுபவர்களின் விலக்கு கோரிக்கைகளை மறுக்கும் ஒரு யதார்த்தமாகும்.

- இறுதி இரண்டு அமர்வுகளில் பங்குபற்றுனர்கள் தினசரி சந்திக்கும் ஊடக வெளிகளுக்குச் செல்லும்போது பயன்படுத்தக் கூடிய மெய்நிகர் மற்றும் விமர்சன சிந்தனை கருவிகளை வழங்கினர் . பல்வேறு டிஜிட்டல் கருவிகள் முதல் தகவல் மற்றும் காட்சிகளை சரிபார்க்க இணைய வெளிகளைப் பயன்படுத்தும் போது தங்களுக்குள் கேட்க வேண்டிய கேள்விகள் வரை வெறுப்புணர்வுப் பேச்சை எதிர்கொள்ளும் பேச்சு மற்றும் நேர்மறை செய்தியை ஊக்குவிப்பதற்கான யோசனைகளும் இதில் உள்ளடங்கியிருந்தன.

- இந்த கையேடு ஒவ்வொரு அமர்வுகளிலும் பேச்சாளர்களால் முன்வைக்கப்பட்ட முக்கிய கூறுகளை ஒருங்கிணைக்கிறது. தொடரின் பங்கேற்பாளர்கள் அல்லது இந்த வெளியீட்டின் வாசகர்களுக்கு ஆர்வமளிக்கும் வகையில், பேச்சாளர்களால் முன்னர் எழுதப்பட்ட வெளிப்புற வளங்களையும் இது வழங்குகிறது.

# அமர்வு 01 :
# உலகளாவிய ரீதியிலான கதைகள்

“வெறுப்புணர்வுப் பேச்சு” பெரும்பாலும் மக்கள் இணையத்தை அதிகம் பயன்படுத்துவதால் ஏற்படும் ஒரு நிகழ்வாக கருதப்படுகிறது. எவ்வாறாயினும் இது ஒரு பரந்த சமூக மற்றும் அரசியல் பின்னணியினாலும் அதன் விளைவாகவும் நிகழ்கிறது மற்றும் இது ஏற்கனவே இருக்கும் தவறான முற்கற்பிதங்களின் நீட்சியாகும் எனவும் குறிப்பிடலாம். இந்த அமர்வு பல்லின சமூகங்களில் ஓரங்கட்டப்படுதல் மற்றும் தீவிரவாதம் பற்றிய ஒரு பரந்த விடயம் சம்பந்தமாக பேசுவதோடு இந்த சூழல்களில் வெறுப்புணர்வுப் பேச்சு எவ்வாறு வெளிப்படுகிறது என்பது குறித்தும் விளக்குகிறது. சட்டத்தின் மூலம் வெறுப்புணர்வுப் பேச்சைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் மற்றும் நல்லிணக்கத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கும் நாடுகளிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களைக் கொண்டும் பேச்சாளர்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

***டாக்டர் ஜேம்ஸ் கோமஸ்***

***தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் உள்ள நாடுகளிலும் நாடுகளுக்கு இடையேயும் கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் சமூகங்களின் முன்னேற்றத்திற்கான கொள்கை தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு சமூக நிறுவனமுமான தாய்லாந்தில் உள்ள ஆசிய மத்திய நிலையத்தின் பிராந்திய பணிப்பாளர்.***

- தென்கிழக்கு ஆசியாவின் அனுபவத்திலிருந்து வெறுப்புணர்வுப் பேச்சின் சில வடிவங்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அகதிகள் பல்வேறு பாலின அடையாளங்கள் மற்றும் பாலியல் நோக்குநிலைகள் மற்றும் வெவ்வேறு அரசியல் கொள்கைகளைப் பின்பற்றுபவர்களை நோக்கி பேசப்படுகின்றன. இனம் மற்றும் மதத்திற்கு அப்பாற்பட்டு இந்த விடயங்கள் செல்கின்றன என்பதை வெறுப்புணர்வுப் பேச்சை எதிர்க்க விரும்புபவர்கள் அறிந்து வைத்திருக்க வேண்டியது முக்கியமாகும்.

- இப் பிராந்தியத்தில் வெறுப்புணர்வுப் பேச்சுக்கு எதிரான சட்ட ரீதியான நடவடிக்கை பெரும்பாலும் பேச்சு மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்தும் பேச்சுச் சுதந்திம் தொடர்பான சட்டங்களை மீறுபவையாகக் காணப்படுகின்றன.

- சிங்கப்பூர், மலேசியா, பிலிப்பைன்ஸ் அல்லது மியான்மர் போன்ற நாடுகளால் இயற்றப்பட்ட "நல்லிணக்கச் சட்டங்கள்" இதற்கு சரியான உதாரணங்களாகும்

- அவை தீர்வுகளில் காணப்படும் வேறுபாட்டுத் தன்மையின் ஒரு எடுத்துக்காட்டாகும். ஏனெனில், இனங்கள் அல்லது மதத்தின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு ஒரு "சிறப்பு அந்தஸ்தை" வழங்குவதன் மூலம், இந்த சட்டங்கள் பன்முகத்தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன. அதுமட்டுமன்றி, இன அடிப்படையிலான கொள்கைகள் பின்வரும் விடயங்களுக்கு வழிவகுக்கின்றன.

  - மியான்மாரில் ரோஹிங்கியா முஸ்லிம்களை ஓரங்கட்டுதல்
  - இந்தோனேசியாவில் ஆவணமற்ற தொழிலாளர்கள் மீதான பாகுபாடு
  - வியட்நாமில் மாற்றுக் கருத்துக் கொண்ட பதிவர்களின் கைது
  - மலேசியாவில் திருநங்கைகளுக்கு எதிரான வன்முறை

- உண்மையில் சமூகத்தில் காணப்படும் துருவப்படுத்தலை எதிர்கொள்வதற்கு இன அடையாளங்களைக் குறிப்பிட்டுப் பேசுபவர்கள் அகற்றப்பட வேண்டுமென்ற விடயத்தை சட்டங்களும் கொள்கைகளும் கொண்டிருக்க வேண்டும்.

- காலனித்துவ பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக இனம் சார்ந்த கொள்கைகளை பெரிதும் பயன்படுத்தும் நாடுகளில் காலனித்துவப்படுத்தப்பட்ட நாடுகளும் உள்ளன என டாக்டர் கோமஸ் குறிப்பிட்டார். பிரித்தானியர்கள் தாம் சந்தித்த பழங்குடியின மக்கள் தொடர்பான அவர்கள் அணுகுமுறை, ஆசிய தொழிலாளர் படையில் எப்படிப்பட்ட விளைவினை ஏற்டுத்தியதென்றால், அவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர் - முதலில் பௌதீக ரீதியாகப் பிரிக்கப்பட்டனர். அதன் பின்னர் இன ரீதியாகப் பிரிக்கப்பட்டனர். பெரும்பான்மையினருக்கு இது நன்மை பயக்கும் ஒன்றாக இருந்ததனால் இந்த கொள்கை காலத்துவ ஆட்சி முடிவடைந்த பின்னரும் இன்று சமூகங்களில் காணப்படும் இன ரீதியான பிரிவுகள் தொடர்கின்றன.

- தேர்தல் பிரச்சாரங்களின் போது வெறுப்புணர்வுப் பேச்சினை அரசியல் ரீதியாக அணிதிரட்டுவதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு பழமைவாத ரீதியான ஆதரவைப் பெறுவதற்காக பாதிக்கப்படக்கூடிய சமூகத்திற்கு எதிராக வெறுப்புணர்வுப் பேச்சு ஆயுதமாக்கப்படும் போது இது பெரும்பாலும் நிகழ்கிறது.

- வெறுப்புணர்வுப் பேச்சுக்கான தீர்வாக டாக்டர் கோமஸ் தெரிவிப்பது என்னவெனில், சட்டத்தில் தீர்வைப் பற்றி கரிசனை செலுத்துவோமானால் பெரும்பாலான வழக்குகள் பெரும்பான்மையினரால் அரசியல் ஆதாயத்திற்காக தாக்கல் செய்யப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ளலாம். இது தவிர, மத்தியஸ்தம் போன்ற சட்டப்பூர்வமற்ற நடவடிக்கைகளை நாடும் சந்தர்ப்பத்தில், பெரும்பான்மை அதிகாரத்தில் இருக்கும்போது விடயங்கள் எப்படித் திசை திருப்பப்படுகின்றன என்பது தொடர்பில் ஒருவர் கவனம் செலுத்துதல் வேண்டும். சுயாதீன சிவில் சமூகத்தின் பங்கு மற்றும் அவற்றின் ஆதரவுத் திறன் ஆகியவை இங்கு முக்கியமானவையாகும்.

- அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நாட்டின் பிரதான ஊடகங்களின் கருத்துக்கள் மற்றும் சமூகக் கட்டுக்கதைகள் போன்றவை சமூக ஊடகங்களால் எவ்வாறு நீர்த்துப்போகச் செய்யப்படுகின்றன என்பதையும் அவர் குறிப்பிட்டார். அதிகாரத்தில் இருக்கும் இந்த அரசாங்கத்தின் வெறுப்புணர்வுப் பேச்சுக்கான தீர்வாக தவறான தகவல் தொடர்பில் பேசுகின்ற மற்றும் சமூக ஊடக உட்கட்டமைப்பில் இறுக்கமான கட்டுப்பாடுகளை விதிக்கும் சட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டும். அத்துடன் பொதுமக்கள் மற்றும் இவ்வாறான சட்டங்களினால் இலக்கு வைக்கப்படுபவர்கள் போன்ற அதிகாரத்தில் இல்லாதவர்கள், பாதிக்கப்பட்ட சமூகங்களின் மனக்குறைகளைத் தணிக்க சுதந்திரமான நிறுவனங்கள் உருவாக்கப்படும் என நம்புகிறார்கள்.

- வெறுப்புணர்வுப் பேச்சு மற்றும் பாகுபாடுகளுக்கு மக்கள் எவ்வாறு பிரதிபலிக்கிறார்கள் என்பதையும் அவர்களின் கருத்து வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்தும் இந்த முயற்சிகளும் கவனிக்கப்பட வேண்டியது அவசியமாகும். சாத்தியமுள்ளவர்கள் தங்கள் அதிகார வரம்பை விட்டு வெளியேறுவதைக் காணலாம். மேலும் அவர்கள் எங்கு செல்கிறார்கள் என்பது தொடர்பிலோ அவர்களுக்கு சிறந்த சூழல் அமையுமா என்பதோ நிச்சமற்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. மிகவும் கவலையான விடயம் என்னவென்றால், சிறுபான்மையினர் ஒரு நாட்டிற்குள் தங்கள் நிலைமையை எவ்வாறு ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதையும் அவர்கள் தங்களை பெரும்பான்மையினரின் கட்டுக்கதையின் ஒரு பகுதியாக தம்மை ஆக்கிக் கொள்கிறார்கள் என்பது தொடர்பிலும் அவர் குறிப்பிடுகிறார்.

*ஜெஹான் குணதிலக*

***சர்வதேச மனித உரிமைகள் மற்றும் பொதுச் சட்டம் தொடர்பில் கவனம் செலுத்துகின்ற இலங்கையைச் சேர்ந்த ஒரு சட்டத்தரணி, வெறுப்புணர்வுப் பேச்சுக்களுக்கு எதிரான சட்டக் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் தொடர்பாக இவர் விரிவாக எழுதியுள்ளார்.***

- வெறுப்புணர்வுப் பேச்சுக்கு மறுப்பளித்தல் அல்லது தீர்வுகளைக் கண்டுபிடிப்பதில் ஒரு முக்கிய பிரச்சினை என்னவென்றால், இதற்கான நிலையான வரைவிலக்கணங்களும் விதிமுறைகளும் காணப்படாமையாகும். பல ஆண்டுகளாக, காணப்படும் வெறுப்புணர்வுப் பேச்சுக்களில் பல வரைவிலக்கணங்களும் மற்றும் கூறுகளும் காணப்படுகின்றன. அவை வெறுப்புணர்வுப் பேச்சுக்களை வேறுபடுத்திப் பார்க்க உதவக்கூடும்.
    - வெறுப்புணர்வினை வெளிப்படுத்தல் - எவ்வாறாயினும் பல சந்தர்ப்பங்களில் அது எப்போதும் வெளிப்படையான வெறுப்பாக வெளிப்படுத்தப்படுவதில்லை ஆனால் ஒரு குறியீடாக அல்லது சைகையாக வெளிப்படுத்தப்படலாம்.
    - அறிவுபூர்வமற்ற கூறு - குழுவொன்று மாறா நிலைக்குக் குறைக்கப்படுகின்ற போது - உங்களுக்கு ஒருவர் தவறு / கொடுமை செய்யும் பட்சத்தில் அது அறிவுபூர்வமான வெறுப்புணர்வு அல்ல.
    - வெறுப்புணர்வுப் பேச்சு தனிநபர்களை விடவும் கொள்கைகளையே இலக்காகக் கொள்கின்றது. உதாரணமாக ஒரு நம்பிக்கையினைப் பின்பற்றுபவர்களை எதிர்ப்பதற்கு குறித்ததொரு நம்பிக்கை முறையினைப் பின்பற்றுபவர்கள் குற்றம் சாட்டப்படலாம் ஆனால் அது வெறுப்புணர்வுப் பேச்சு என **கருதப்படாமலிருக்கலாம்.**
    - இக் காரணிகளுக்குள் வராத ஆனால் வெறுப்புணர்வுப் பேச்சுக்கான அடித்தளத்தை உருவாக்கக்கூடிய பேச்சு பேரினவாத பேச்சு என்று அழைக்கப்படுகிறது. அங்கு மற்றொரு குழு மீது வெறுப்பை வெளிப்படையாக வெளிப்படுத்துவதற்கு பதிலாக ஒருவர் தனது சொந்த குழுவின் மேன்மையை உயர்த்திப் பேசுகின்றார்.

- நாம் தற்போது பார்க்கும் வெறுப்புணர்வுப் பேச்சு தெற்கில் போருக்குப் பிந்தைய பொருளாதார இலாபங்கள் தொடர்பான எதிர்பார்ப்புகள் நிறைவேறாததன் இறுதி விளைவாக இருக்கலாம். இது முஸ்லிம்கள் திடீரென பழிவாங்கப்படுவதற்கான

சட்டபூர்வமான தன்மையைக் கொடுத்தது. எவ்வாறாயினும், சிங்கள-பௌத்த மேலாதிக்கத்துடன் இலங்கை வம்சாவளி கதைகள், கலாசாரம் மற்றும் புராணங்கள் மிகவும் ஆதிக்கம் செலுத்தும் நிலையில் பொருளாதார ரீதியான நிலைமையே ஒரே காரணமாக இருக்க முடியாது. இவை உரிமை பற்றிய கட்டுக்கதைகள் மற்றும் அடுத்தடுத்த இருப்பு தொடர்பான அச்சங்கள் அதிகரிக்கக் காரணமாகின்றன. இங்கு பெரும்பான்மையினர் தாம் பாதிக்கப்படுவதாக உணர்கிறார்கள்.

- எனவே தீர்வுகள் கட்டமைப்பு ரீதியாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார். வெறுப்பின் உண்மையான காரணங்கள் கலந்துரையாடப்படாமல் இருக்கும் போது பேச்சை நிறுத்துவது பிரச்சினையில் ஒரு "பேண்ட் எய்ட்" என அழைக்கப்படும் தற்காலிகத் தீர்வு மட்டுமேயாகும். உதாரணமாக, வெறுப்புணர்வுப் பேச்சுக்கள் விரைவாக அதிகரிப்பதற்குக் காரணமாக அமையும் இணையம் எதிர்காலத்தில் வேறு சில கருவிகளால் மாற்றப்படும் போது வெறுப்புணர்வுப் பேச்சு ஒரு பிரச்சினையாகவே இருக்கும்.

- வெறுப்புணர்வுப் பேச்சுக்கும் கருத்துச் சுதந்திரத்துக்கும் இடையே மோதல் இருக்கக்கூடாது. கட்டுப்பாடுகள் சுதந்திரத்தை பாதிக்குமா என்பதை கருத்தில் கொள்ளும்போது, ஒரு நபரின் சுதந்திரம் மற்றவர்களுடைய உரிமைகளுக்கு கட்டுப்படுகிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். வெறுப்புணர்வுப் பேச்சினைக் கட்டுப்படுத்துவதென்பது சுதந்திரமான பேச்சைக் கட்டுப்படுத்தக்கூடாது என்ற கருத்தை அவர் முன் வைக்கிறார். ஏனென்றால் வெறுப்புணர்வுப் பேச்சு என்பது சுதந்திரமான பேச்சுக்கு புறம்பாக உள்ளதாகும்.

- இருப்பினும், இங்கே கோடுகள் தெளிவாக வரையப்பட வேண்டும். மேலும் இந்த கோடுகளை மோசமான நம்பிக்கையில் வரையும் செயற்பாட்டாளர்களால் பிரச்சினை எழுகிறது. அந்த கோட்டை வரையும் நிறுவனத்தை மக்கள் நம்ப வேண்டும் மற்றும் இந்த நிறுவனம் நாடாக இருந்தால், சுதந்திரமாக பேசுவதை பாதுகாக்க எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என குணதிலக அறிவுறுத்துகிறார்.

- நல்ல எண்ணத்தில் அரசாங்கம் வெறுப்புணர்வுப் பேச்சுக்கு எதிராக சட்டங்களைப் பயன்படுத்தாது என்று நினைக்க நல்ல காரணம் இருந்தால் குடிமக்கள் அதிகப்படியான அபாயத்தின் காரணமாக இந்தச் சிக்கலைச் சமாளிக்க

சட்டபூர்வமற்ற தீர்வுகளைத் தேட வேண்டியேற்படும். மோசமான நம்பிக்கையில் செயல்படும் அரசாங்கத்தை செயற்பட அனுமதிப்பதை விட சுதந்திரமான பேச்சை பாதுகாப்பது மிகவும் முக்கியம் என்று அவர் குறிப்பிடுகிறார்.

- இணையம் என்பது பாரம்பரிய அரசாங்க கட்டமைப்புகளுக்கு அப்பாற்பட்ட ஒரு வெளி ஆகும். அத்துடன் அதைக் கட்டுப்படுத்த அரசுக்கு காரணமும் உள்ளது. சட்டத்தின் மூலம் வெறுப்புணர்வுப் பேச்சு கட்டுப்பாடு என்பது அந்த இணைய வெளியைக் கட்டுப்படுத்தும் ஒரு மாற்று வடிவமாகும். மேலும் இணையத்தை ஒழுங்குபடுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பில் நாம் கரிசனை செலுத்த வேண்டும்.

- இலங்கையில் நாம் ஒரு முரண்பாட்டைக் காண்கிறோம்
  - வன்முறைக்கான தூண்டுதலை கட்டுப்படுத்த சட்டங்கள் பயன்படுத்தப்படாத தெளிவான செயலற்ற தன்மை. எனவே இது ஒரு அரசாங்கத்துடன் மாத்திரம் தொடர்புபட்டதல்ல. ஆனால் குற்றவாளிகள் பெரும்பான்மை குழுவினைச் சேர்ந்தவர்கள் என வரும் போது ஏற்படும் அரசாங்க நிறுவன்களின் பிரச்சனை.
  - அதே நேரத்தில் வெறுப்புணர்வுப் பேச்சு அரசாங்கத்தைக் குற்றம் சுமத்தும் அல்லது விமர்சிக்கக்கூடிய அறிக்கைகளை உள்ளடக்கியது. சட்டத்தரணிகள் மற்றும் கவிஞர்கள் கைது செய்யப்பட்ட அண்மைய வழக்குகள், இந்த செயல்பாட்டில் இருக்கும்போது பின்னணியில் அனைத்துலக குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை (ICCPR) எவ்வாறு பயங்கரவாதத்தின் கருவியாக பயன்படுத்தப்படுகிறது என்பதை காட்டுகிறது.

  இந்த சூழலில், நிறுவனங்கள் சிதைவடையத் தொடங்குகின்றன. அவற்றை நம்ப முடியாது. இலங்கை சூழலில் சுதந்திரமான நிறுவனங்களை உருவாக்கி சந்தேகத்திற்குரியவர்களை வரவழைக்கும் முயற்சிகளை பெரும்பான்மை போக்குகள் தலைகீழாக மாற்றியுள்ளன.

- அங்கு அவர்களின் எதிர்மறையான போக்கு பெருகும்போது நேர்மறையான கதைகளால் ஊடக வெளியை நிரப்ப வேண்டிய அவசியம் உள்ளது. இத்தகைய நேர்மறைத் தன்மையைப் பிரதிபலிக்க மக்களை ஊக்குவிக்கும் திறனை இந்தக் கதைகள் கொண்டிருக்கலாம்.

- 30 வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட கல்வி வேறு பிரிக்கப்பட்டுள்ளது என்பது கவலைக்குரியது. மேலும் வேறுபிரிக்கப்படாத கல்வி துருவப்படுத்தலைத் தணிக்க உதவும். இது சிறு வயதிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். அங்கு குழந்தைகள் எல்லா சமூகங்களையும் சேர்ந்தவர்களுடன் தொடர்பு கொள்கின்றார்கள். ஏனெனில் பிற்கால வாழ்க்கையில் சமூகமயமாக்கலை மாற்றியமைப்பது கடினமான காரியமாக இருக்கும் என்பதனாலாகும்.

***சாய்ஜாய் லியாங்புன்சாகுல்***

***தாய்லாந்து மற்றும் மியன்மாரில் பணிபுரிந்த அனுபவமுள்ள ஒரு பெண் ஆராய்ச்சியாளர். டிஜிட்டல் உரிமைகள் மற்றும் தொழில்நுட்பத்தின் பொறுப்பான பயன்பாடு ஆகியவற்றில் வலுவான கவனம் செலுத்துபவர்.***

- "வெறுப்புணர்வுப் பேச்சு" என்ற சொற்களின் வரையறைகள் ஒரு பிரச்சினை அத்தோடு உள்ளூர் மொழிகளில் அந்த வார்த்தையின் விளக்கமும் ஒரு சவாலாகவே உள்ளது. உதாரணமாக, தாய்லாந்தில் வெறுப்புணர்வுப் பேச்சு என்ற வார்த்தை 7 ஆண்டுகளுக்கு முன்பு தாய் (Thai) மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. அந்த நேரத்தில் புதிய வார்த்தையின் அர்த்தம் என்னவென்று யாருக்கும் தெரியாது. அது சட்டத்தின் மீறலைக் குறிக்கிறது. அவதூறு என்ற போர்வையில் அப்போதிருந்து தாய்லாந்தில் வெறுப்புணர்வுப் பேச்சுச் சட்டங்கள் முதன்மையாக அரச குடும்பத்தை விமர்சிப்பவர்களை மௌனப்படுத்த பயன்படுத்தப்படுகின்றன.

- மியன்மாரில் அவரது ஆராய்ச்சி அனுபவம் விரிவானது. மேலும் சமூக ஊடக பயன்பாட்டை கண்காணித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்வதில் அவர் ஈடுபட்டிருந்த காலத்திலிருந்து வெறுப்புணர்வுப் பேச்சு தொடர்பில் வெறுமனே தனிநபர்கள் வெறுப்புடன் இருப்பதைக் கண்டறிதல் மாத்திரம் போதுமானதல்ல. மாறாக மோசமான செயற்பாட்டாளர்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற ஒரு பிரச்சினை என்ற வகையில் அவர்களைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறார்.

- சமூக ஊடகங்களில் வெறுப்புணர்வுப் பேச்சு சமூகத்தில் என்ன நடக்கிறது என்பதையும் குறித்த காலத்தில் காணப்படும் மோதலையும் பிரதிபலிக்கிறது. சமூக ஊடகங்களின் வடிவத்திலான தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்கனவே

இருக்கும் மோதலை மேலும் கூர்மைப்படுத்துவதன் மூலம் மோசமாக்க உதவுகின்றன.

- அவர் ஆய்வு செய்த இரு நாடுகளுள் எந்த நாட்டிலும் ஜனநாயக சார்பு எதிர்ப்பு நிகழ்வுகளில் கொள்கை ரீதியான பிளவுகளில் இரு தரப்பிலும் வெறுப்புணர்வுப் பேச்சு இருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். வெறுப்புணர்வுப் பேச்சுக்கு அண்மித்த வகையான கருத்துகள் - அவை வெளிப்படையாக தீங்கு விளைவிக்காது என்றாலும் அந்த கருத்து வைரலாகிறது என்பதையும் அவர் குறிப்பிடுகிறார்.

- கலந்துரையாடலுக்காக இருக்கும் சமூக ஊடக உரையாடல்கள் - மற்றும் விரிவாக்கத்தின் மூலம் வெறுப்புணர்வுப் பேச்சுக்கள் வியாபிக்கின்றன. ஆளும் சக்திகளுக்கு எதிராக இளைஞர்கள் தங்கள் கோபத்தை வெளிப்படுத்த அரசியலில் போதிய இடம் இருப்பதில்லை. சமூக ஊடகங்கள் ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் கவனத்தை ஈர்ப்பதற்கும் ஒரு வாய்ப்பை அளிக்கின்றன. ஏனெனில் அவர்கள் ஒரு அவநம்பிக்கையான சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலையை எதிர்கொள்கின்றனர்.

- தீர்வுகள் தொடர்பில் ஆராயும்போது வெறுப்புணர்வுப் பேச்சு இல்லாத எதிர்மறை அல்லது நேர்மறையான சூழ்நிலை என்னவாக இருக்கும் என்று அவர் எதிர்வு கூறுகின்றார். இது வெறுப்புணர்வு பேச்சு இல்லாத உலகம் அல்ல. ஆனால் மக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த தொழில்நுட்பம் காணப்படுவது இந்த உலகின் சிறந்த சூழ்நிலையாகும். 50 ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவர் என இந்த உலகத்தை நாம் கற்பனை கூட செய்திருக்க மாட்டோம். எனவே இந்தச் சூழ்நிலைக்கு எவ்வித பாதிப்பும் நேராதிருப்பது முக்கியமாகும்.

- இந்த பேச்சை ஒழுங்குபடுத்துவது மாத்திரம் பயனைத் தரப்போவதில்லை. ஏனெனில் அரசியலில் உள்ள மோசமான செயற்பாட்டாளர்கள் தங்களை அரசியல் ரீதியாக எதிர்க்கும் ஏனைய கட்சிகளை அழிக்க இதனைப் பயன்படுத்துகின்றனர்.

- சமூக ஊடக நிறுவனங்களும் தங்கள் தயாரிப்புகளை மேம்படுத்த பணியாற்ற வேண்டும். முக்கிய தளங்களைச் சுற்றியுள்ள கிட்டத்தட்ட அனைத்து முடிவுகளும்

சிலிக்கன் பள்ளத்தாக்கில் எடுக்கப்படுகின்றன. பின்னர் உலகெங்கிலும் நாம் எதனைப் பயன்படுத்துகிறோம் என்பது நிருவகிக்கப் பயன்படுகிறது. இது போன்ற ஒரு தொழில்நுட்பம் குறித்த கொள்கை உள்ளடங்கியிருப்பதை உறுதி செய்வது ஒரு படி முன்னேற்றகரமானதாக இருக்கும். மேலும், இது ஒரு சிறிய குழுவிலிருந்து வரவில்லை என்பதும் முக்கியமானதாகும்.

- சமூக வலைதளங்களில் வெறுப்புணர்வோடு இருப்பதற்காக வெறுப்புணர்வுப் பேச்சு தனிநபர்களை இலக்கு வைப்பதையும் தாண்டி செல்கிறது என்பதை அவர் வலியுறுத்துகிறார். அவருடைய அனுபவத்தைப் பொறுத்தவரை பெரும்பாலான வெறுப்புணர்வுப் பேச்சு திட்டமிடப்பட்டது. அவரது அவதானிப்புகளைப் பொறுத்தவரை, இராணுவம் போன்ற முழுமையான நிறுவனங்களும் வெறுப்புணர்வுப் பேச்சு வியாபகமடைவதற்கு பங்கு வகிக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. அர்த்தமுள்ள வகையில் சொல்வதானால், அனைத்து மோசமான செயற்பாட்டாளர்களும் தங்கள் செயல்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

# அமர்வு 2 :
# மொழியின் சக்தி

தற்போதைய சிந்தனை மற்றும் தகவல் யுகத்தில் பிரதான மற்றும் டிஜிட்டல் (**னுபைவையட**) ஊடகங்களுக்கிடையேயான இடைவெளிகளைப் போன்றே ழுககடமைநெ மற்றும் ழுடெமைநெ ஆகியவற்றிக்கு இடையேயான இடைவெளியும் குறுகியது. வெறுப்புணர்வுப் பேச்சை உருவாக்குவதிலும் பரப்புவதிலும் பிரதான மற்றும் டிஜிட்டல் ஊடகங்களின் பங்கு தொடர்பாக பங்கேற்பாளர்கள் பேசுகின்றனர். மேலும் எதிர்க் கருத்துக்களை உருவாக்க பயனர்கள் எவ்வாறு அதே இடங்களை ஆக்கபூர்வமான வழிகளில் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றிய நுணுக்கங்களை துருவப்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கினர்.

***தீபாஞ்சலி அபேவர்தன***

***வெரிட்டே ரிசர்ச்சின் ஊடக ஆய்வுத் தலைவராக செயற்படும் இவர் “எத்திக்ஸ் ஐ” என்ற கண்காணிப்புப் பணியை மேற்பார்வையிடுகிறார். இது மூன்று மொழிகளிலும் வெளிவரும் பிரதான ஊடக வெளியீடுகளில் காணப்படும் நெறிமுறையற்ற நடைமுறைகளைக் கண்காணிக்கிறது***

- தவறான தகவல் கிடைப்பது வெறுப்புணர்வுப் பேச்சுக்கு வழிவகுக்கும். எனவே அறிக்கையிடுவதில் துல்லியம் என்பது முக்கிய ஊடக நெறிமுறைகளில் ஒன்றாகும்.
  - முஸ்லிம்கள் நடத்தும் ஹோட்டலின் உணவில் கருத்தடை மாத்திரைகள் இருப்பதாக தவறான செய்திகளால் அம்பாறையில் நடந்த முஸ்லீம் எதிர்ப்பு வன்முறை
  - டாக்டர் ஷாபிக்கு எதிரான பிரச்சாரமானது மருத்துவர் சிங்களப் பெண்களை வலுக்கட்டாயமாக கருத்தடை செய்ததாகக் கூறப்படும் செய்திகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. இது விசாரணைகளை உறுதிப்படுத்த முடியாது என்பதால் பின்னர் அது புனையப்பட்டதாக நிரூபிக்கப்பட்டது.

- “எத்திக்ஸ் ஐ” அவதானிக்கும் ஒரு மாறாதிருக்கும் ஒரு செயற்பாடு என்னவென்றால் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தால் மட்டுமே தவறு செய்தவரின் இனத்தைக் குறிப்பிடும் பிரதான ஊடகங்களின் போக்காகும். இந்த சமூகங்களை குற்றவாளிகளாகவும் அதனால் வெறுப்புணர்வுப் பேச்சுக்கு

தகுதியானவர்களாகவும் காண்பிக்கின்றன. மிக அரிதாக ஒரு "சிங்கள போதைப்பொருள் கடத்தல்காரர்" பற்றி குறிப்பிடுகின்றன. அதேவேளை இது போன்ற குற்றங்களுக்காக தமிழர்கள் அல்லது முஸ்லிம்கள் எப்போது கைது செய்யப்படுகிறார்கள் என்றால் அந்த இனத்தை அறிக்கையில் குறிப்பிடுகிறன.

- முஸ்லிம்களுக்கு எதிராக இனவெறியை பரப்புவதற்கு ஊடகங்கள் மற்றும் பரந்துபட்ட வகையில் சமுதாயத்திற்கு சட்டபூர்வமான அங்கீகாரத்தை அளித்துள்ள ஒன்றாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பார்க்கப்படுகின்றது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து வந்த அறிக்கைகள் மற்றும் கருத்துக்கள் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக இருந்த தப்பெண்ணங்களை ஊக்குவிப்பதாக அமைந்தன. மீண்டும் டாக்டர் 'ாபியின் வழக்கு - போதுமான ஆதாரங்கள் இல்லாமல் சிங்களப் பத்திரிகையில் வெளியிடப்பட்டது - இது பல்வேறு தப்பெண்ணங்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது.

- ஒன்லைனில் மேற்கொள்ளப்படும் வெறுப்புணர்வுப் பேச்சு அது வாழ்க்கை மற்றும் பொருளாதாரங்கள் மற்றும் மக்களுக்கிடையேயான உறவுகளில் ஏற்படுத்தக்கூடிய ழககடநைெ தாக்கத்திலிருந்து பிரிக்க முடியாது. சமூக ரீதியான விரோதம் உருவாக்கப்பட்டு பேணப்படுகின்றது. துருவப்படுத்தும் கட்டுக் கதைகள் ஒரு துருவப்படுத்தப்பட்ட சமுதாயத்தை உருவாக்குகின்றன.

- வெறுப்புணர்வுப் பேச்சு அல்லது தவறான தகவலை வெளியிடுவதில் பதிப்பக உரிமையாளரின் தாக்கம் குறித்த கேள்விக்கு அபேவர்தனா பதிலளித்ததோடு உரிமையாளரின் கருத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அல்லது பிரதிநிதித்துவப்படுத்தாத ஊடக நிறுவனங்கள் இருப்பதாக அவரது ஆராய்ச்சியில் தெரிய வந்ததாகவும் சுட்டிக்காட்டினார். சில சந்தர்ப்பங்களில் சிறுபான்மை சமூகங்களை சித்தரிக்கும் மற்றும் அறிக்கையிடுவதற்கான அணுகுமுறையில் ஒரே ஊடக நிறுவனத்தில் வெவ்வேறு வெளியீடுகள் வேறுபட்டவையாகக் காணப்படுகின்றன. வெளியிடப்பட்டவற்றிற்கு பிரதம ஆசிரியரே பொறுப்பாவார். உதாரணமாக, கொவிட் பரவலுக்கு முஸ்லிம்களே பொறுப்பு என கூறும் போது, அது தொடர்பில் பொது ஆய்வு நடத்தப்பட வேண்டும்.

- இலங்கையில் தகவல்களைக் கொண்டு செல்லும் முக்கிய வாகனமாக சமூக ஊடகங்கள் காணப்படுகின்றன. மேலும் இது பரவலாக நுகரப்படுகிறது. இது

பொது மக்களின் மனோநிலையை வடிவமைப்பதைக் காணமுடிகிறது. எனவே நாம் வாழும் சமூகத்தின் தற்போதைய நிலையினைப் பிரதிபலிக்கிறது.

- இந்தக் காரணத்திற்காக இத் தளங்களில் மக்களின் செயற்பாடுகளிலிருந்து வெறுப்பு மற்றும் பிளவை உருவாக்கும் ஒரே முகவர்கள் அரசியல் கட்சிகளே என பொறுப்பை திசை திருப்ப முடியாது என அவர் நம்புகிறார். பிரதான ஊடகங்களின் செயற்பாடு போலல்லாமல் சமூக ஊடகங்களில் இந்த வகை செயற்பாட்டின் சூத்திரதாரிகள் என ஒரு குழுவை அடையாளம் காண்பது கடினமாகும்.

- சமூகத்தில் நிலவும் வெறுப்புணர்வு பெரும்பாலும் ஆழமாக வேரூன்றிய பிரச்சினைகள் மற்றும் உறுதியாக நம்பப்படும் பாதுகாப்பின்மை ஆகியவற்றுடன் தொடர்புடையது. எனவே ஒரு தீய செயற்பாட்டின் மூலம் மீண்டும் வெறுப்பு இருப்பதை நிலைநிறுத்தி பல்வேறு விடயங்களை இலகுவில் அடைந்து கொள்வதற்கான ஆயுதமாக பயன்படுத்தப்படுகின்றது.

- எதிர்மறைச் சிந்தனையால் நிரம்பிய சகாப்தத்தில் ஒழுக்கநெறி சார்ந்த அறிக்கையிடலை ஊக்குவிப்பது அவசியம் என்று அபேவர்தன கருதுகின்றார். சிக்கல் நிறைந்த அறிக்கையை உன்னிப்பாக அவதானித்தல் மற்றும் அது தொடராமல் இருப்பதை உறுதி செய்தல் ஆகியவை அன்பினை வளர்ப்பதற்கான ஒரு வழி என அபேவர்தன நம்புகின்றார்.

*மஹிஷா பால்ராஜ்*

***இளைஞர் ஆதரவுக் குழுமமான ஹேஷ்'டேக் ஜெனரேஷனின் பெண் இணை ஸ்தாபகர். அவர் சமூக ஊடக பயன்பாடு மற்றும் நடத்தை பற்றிய ஆழமான ஆய்வுகள் மற்றும் தேர்தலின் போது கட்டுக்கதைகள் எவ்வாறு ஆயுதமாக்கப்படுகின்றன என்பது தொடர்பில் கண்காணிப்புக்களை மேற்கொள்கின்றார்.***

- சமூக ஊடக தளங்கள் நாம் எவ்வாறு தகவலை உருவாக்குகிறோம் மற்றும் நுகர்கிறோம் என்பதை ஜனநாயகப்படுத்துகின்றன. பிரதான ஊடகங்களை பிரதிபலிக்கும் ஒரு இடத்தில் தகவலை வடிவமைப்பதற்கும் பரப்புவதற்கும் மக்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கின்றன. இருப்பினும் இந்த சக்தி என்பது

உண்மையான செய்திகளுக்கு மத்தியில் வதந்திகள் பெருகுவற்கும் வாய்ப்புள்ளது எனவும் அர்த்தப்படும்.

- ழகககடைநெ மற்றும் ழடெனைநெ இடங்கள் மாறும் ஒரு சுழற்சியாகும் என விளக்கும் பால்ராஜ், தகவல்கள் சுதந்திரமாக ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பரவிச் செல்வதால் ஒன்றின் செயற்பாடு மற்றொன்றின் விளைவுகளுக்கு வழிவகுக்கும் எனத் தெரிவிக்கின்றார். அவரது அவதானத்தின் பிரகாரம் வெறுப்புணர்வு கட்டுக்கதைகள் அடுத்த “பெரிய” தலைப்பு கிடைக்கும் வரை 2 முதல் 3 வாரங்கள் சுழற்சியில் இருக்கும்.

- முஸ்லிம்களை இலக்கு வைத்த இன மத ரீதியான கோணத்துடனான வெறுப்புணர்வுப் பேச்சு இந்த குறுகிய கால சுழற்சிகளை மீறுகிறது. இலங்கையில் அச் சமூகத்திற்கு எதிராக முன்வைக்கப்படும் தப்பெண்ணங்கள் மற்றும் வதந்திகளின் தொடர்ச்சியான இருப்பின் காரணமாக இது நீண்ட காலத்திற்கு ஆண்டு முழுவதும் நிலைத்துக் காணப்படுகின்றது. கடந்த வருடத்திற்குள் மாத்திரம் முஸ்லிம்கள் “உயிரியல் பயங்கரவாதிகள்” எனவும் “பெரும் பரப்பாளர்கள” எனவும் (bio-terrorists and ‘super spreaders’) அழைக்கப்பட்டனர். கட்டாயமாக தகனம் செய்யப்படும் பிரச்சினையின் போது முஸ்லிம்கள் தங்கள் நாட்டின் பாதுகாப்புக்காக எந்தத் தியாகத்தினையும் செய்யாது விசேட சலுகைகளைக் கோருவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

- வெறுப்புணர்வுப் பேச்சு எண்ணிக்கை அடிப்படையில், ஏனைய ஓரங்கட்டப்பட்ட சமூகங்களுக்கு - பெண்கள், தமிழ் மக்கள் - எதிராக முன்வைக்கப்பட்ட போதிலும் முஸ்லிம்களே அதிகம் இலக்கு வைக்கப்படுகிறார்கள் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

- பிரதான ஊடகங்கள் மற்றும் டிஜிட்டல் ஊடகங்களுக்கிடையேயான உறவை பால்ராஜ் விளக்குகையில், முறைகள் வேறுபடலாம் என்றாலும், இந்த கட்டுக் கதைகளை உருவாக்குபவர்கள் மற்றும் அவற்றின் விளைவுகள் ஒரே மாதிரியானவையாகும் எனச் சுட்டிக்காட்டுகின்றார்.

- பிரபலமான முக்கிய ஊடக இணையத் தளங்கள் அண்மைய ஆண்டுகளில் தங்கள் சமூக ஊடக தரத்தினை வளர்த்துக் கொண்டுள்ளன அத்துடன்

தொடர்ந்து சிறந்த தரவரிசையிலும் உள்ளன. இதன் மூலம் தனியொரு செயற்பாட்டாளர் எந்த அளவிற்கு கட்டுக்கதைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை இது நிரூபணமாக்குகின்றது. பிரதான ஊடகங்கள் சில கட்டுக்கதைகளை உருவாக்கலாம். ஆனால் இந்தக் கட்டுக்கதைகள் டிஜிட்டல் தளத்திற்கு கொண்டுவரப்பட்டவுடன் அவை வேறொரு வடிவத்தை எடுக்கலாம். இரண்டு இடங்களும் சுயாதீனமாக இயங்குவதில்லை.

- சமூக ஊடக தளங்கள் இயங்கும் வழிமுறைகள், ஒரு தனிநபர் தனது விருப்பத் தேர்வுகள் அல்லது சார்பு நிலைகளைச் சுற்றியுள்ள உள்ளடக்கத்தைப் பார்க்க முடியும் என்பதை உறுதிப்படுத்துகிறது. இதன் விளைவாக ஒரு சமூகம் அல்லது பிரச்சினையைச் சுற்றியுள்ள பல கட்டுக் கதைகளிலிருந்து மக்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். இந்த வழியில் சமூக ஊடகங்கள் சில வேளைகளில் தேர்தல் தொடர்பில் முடிவுகளை எடுப்பதில் தனிநபரிடமிருந்து அவரது சுயமான தீர்மானம் எடுக்கும் எண்ணம் பறிக்கப்படக்கூடும். இதன் நீடிப்பு சமூகத்தின் கட்டமைப்பை இல்லாமல் செய்கின்றது.

- பேஸ்புக் போன்ற சமூக ஊடக நிறுவனங்கள் இந்த வகை செயற்பாட்டுடன் செழித்து வளர்கின்றன. ஆனால் உலகை நெருக்கமாக கொண்டு வருவதாக பெருமையளித்துக் கொள்கின்றன. அதேசமயம் அவர்களே பெரும்பாலும் நன்மைகளைப் பெறுகின்றார்கள். இந்த தளங்களிலுள்ள நிறுவனங்களுக்கு எதிராக விமர்சனங்கள் எழுகின்றபோது இந்த முறைமை மேலும் அவர்களுக்கு இலாபத்தை கொடுக்கின்றது. எனவே தொழில்நுட்ப நிறுவனங்கள் நச்சுக் கருத்துக்களைக் குறிக்காத மாற்று வழிமுறைகளைப் பார்க்கத் தொடங்குவது அவசியமாகும்.

- கடந்த ஆண்டில் சிரச லட்சாபதி வெற்றியாளர் சுக்ரா முனவ்வர் மற்றும் கிரிக்கெட் வீரர் விஜயகாந்த் வியாஸ்காந்தின் யாழ்ப்பாண ஸ்டாலியன்ஸின் கதைகள் போன்ற நேர்மறையான உள்ளடக்கம் அனைத்து சமூகங்களிலிருந்தும் வெவ்வேறு சமூகங்களுக்கு ஆதரவைப் பெற்றுக் கொடுத்தது.

- மனித உளவியலில் அடிப்படை உள்ளுணர்வாக எதிர்மறை உள்ளடக்கம் இந்த தளங்களில் வேகமாக பகிரப்படுகின்றன. இந்த வகை உள்ளடக்கம் எவ்வளவு நன்றாக வேலை செய்கிறது என்பதைப் பொறுத்து கணிசமான அளவு பணம் அதனை ஆயுதமாக்குவதற்கு செலவிடப்படுகின்றது.

- எனவே சட்டத்தரணிகளும் மக்களும் இந்த குறிப்பிட்ட வெறுப்புணர்வுக் கட்டுக் கதைகளுக்கு எதிராக பிரச்சாரங்களை மேற்கொள்ளும் போது இவை எப்படித் தக்கவைக்கப்படுகின்றன என்பதற்குப் பின்னால் உள்ள தொழில்நுட்ப மற்றும் நிதி சக்தி தொடர்பில் அறிந்திருத்தல் வேண்டும்.

***இஷாரா தனசேகர***

***விகல்ப - பிரசைகளுக்கான ஊடக தளத்தின் முன்னாள் துணை ஆசிரியரும், சுயாதீன ஊடகவியலாளருமான இவர் மனித உரிமைகள் சார் பிரச்சினைகள் தொடர்பிலான காணொளிகளை சிங்கள மொழியில் தயாரித்துள்ளதுடன் டிஜிட்டல் (இலத்திரனியல்) வெளிகளில் அவற்றை வெளியிட்டு அவற்றுக்கான எதிர்வினையாற்றல்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றார்.***

- இலங்கையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலான சிக்கலானதும் உணர்திறன் கொண்டதுமான மனித கதைகள் சிங்கள மொழியில் குறிப்பாக பிரதான ஊடகங்களில் குறைவாக உள்ளது.

- டிஜிட்டல் வெளியில் விவகாரங்களை வெளியிடுவது ஆபத்துக் குறைந்ததும், செலவு குறைந்ததாகவும் இருப்பதால் இலங்கையில் மக்கள் டிஜிட்டல் தளங்களை பயன்படுத்தும் விகிதம் கிரமமாக அதிகரித்துள்ளதுடன் மக்கள் டிஜிட்டல் தளங்களுக்கான தமது நிகழ்ச்சி நிரல்களை வகுக்கவும் பிரச்சினைகளை அதனூடாக எழுப்பவும் ஆரம்பித்துள்ளனர்.

- சமூக வலைத்தளங்கள் மக்கள் சுயமாக உள்ளடக்கங்களை கையாளவும், உடனடி பின்னூட்டங்களை வழங்கவும் வசதிகளை வழங்குகின்றது. மட்டுமல்லாது மொழி வரையறைகள் பெரும்பாலும் இல்லாத காரணத்தினால் எழுத்தாளர்களை சவாலுக்குட்படுத்தவும் முடியுமாக உள்ளது. இந்த உடனடி கேள்விகேட்கும் அம்சத்தினை முன்னணி ஊடகங்கள் வழங்குவதோ அல்லது பொறுப்பு வாய்ந்த அரசாங்க அல்லது தலைமைத்துவத்தினை கேள்விக்குட்படுத்தவோ அனுமதிப்பதில்லை. முன்னரெல்லாம் ஒருவர் ஒரு செய்தியை பத்திரிகையில் படித்துவிட்டு அந்த இடத்திலேயே அச் செய்தியை எழுதியவரை திட்ட மட்டுமே முடிந்தது. ஆனால் இன்று அவ்வாறல்ல. எழுத்தாளரை விரைவாக விமர்சிக்க முடிகிறது. - இன்னுமொருபடி மேலே சென்று - செய்தியை உருவாக்கியவரை தாக்கவும் செய்கின்றனர்.

- சிங்கள மொழி வழி இவ்வாறான தளங்களில் செயற்படும் போது, தனசேகர போன்றவர்களுக்கு குறிப்பாக சிறுபான்மையினர் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் பற்றி அறிக்கையிட்ட போது அச்சுறுத்தல்களுக்கும் எதிர்வினையாற்றல்களுக்கும் முகங்கொடுக்க நேரிட்டது. விமர்சகர்களிடம் இருந்து இனவெறுப்பும், பெண்ணிலை வெறுப்பும் பால்நிலை சார்ந்து வெளிவந்தன. சிங்கள இனத்துக்கு அச்சுறுத்தல் என்று தூற்றப்பட்டதுடன் சகிக்க முடியாத கெட்ட வார்த்தைப் பிரயோகங்களையும் கேட்க நேரிட்டது.

- இருப்பினும், இந்த உடனடி எதிர்வினையாற்றல்கள் எல்லாம் கட்டுரையினை உண்மையாகவே படிக்காதவர்களிடமிருந்தும் தலைப்பைப் பார்த்தோ அல்லது சமூக வலைத்தளங்களில் வரும் பதிவுகளை பார்த்தோ பெரும்பாலும் எழுகின்றன. மறுபுறம், இத்தகைய அறிக்கைகளை தவறாகப் புரிந்து கொண்ட நபர்கள் அல்லது அவர்கள் அவர்களது அடிவருடிகளை தவறாக வழிநடாத்தி தானோ அல்லது தன்னைப் போன்ற வேறு ஊடகவியலாளர்களோ சிறுபான்மையினர் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் பற்றி எழுதும் போதெல்லாம் இவ்வாறு செய்கிறார்கள் என தனசேகர குறிப்பிடுகின்றார்.

- சமூக வலைத்தளங்கள் எவ்வாறு வெறுப்புக்களை காவிச்செல்ல பயன்படுத்தப்படுகின்றன என்பதை கவனித்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவ் வலைத்தளங்களை நடாத்தும் நிறுவனங்களின் பொறுப்பாகும். இனவாதத்திற்கு எதிராகவும் அல்லது தனக்கு எதிரான தாக்குதல்கள் பற்றியும் அவர் பதிவிட்டுள்ள அறிக்கைகள் இன்னமும் இணையத்தில் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையில் பெருகிவரும் வெறுப்புப் பேச்சுக்களை சிங்கள மொழி வாயிலாக அறிக்கையிடுவதற்கான பொறிமுறையில் முன்னேற்றங்களை இந் நிறுவனங்கள் கொண்டுவர வேண்டும்.

- கடந்த காலங்களில் எழுந்த முஸ்லிம் விரோதப் பேச்சுக்கள், வன்முறைகள் தொடர்பில் தனசேகர தான் என்ன நினைக்கின்றார் என்று கூறும் போது: மக்கள் தொடந்தும் வெறுத்துக் கொண்டே இருப்பதில்லை. ஆனால், தமது கருத்துக்களை விரும்பியவாறு தெரிவிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படும் சூழலில் இந்த வெறுப்பு அனைவருக்கும் தெரியக்கூடிய ஒன்றாகவே இருக்கும். அதே நேரம், இந்த வெறுப்பினை கையாளுவதற்கான போதுமான வழிமுறைகளும் தற்போது கிடையாது.

- நாம் சமூகத்தில் நீண்ட காலமாக வெறுப்பை மாத்திரமே அதிகம் காணுகின்றோம் என்பது நீண்ட காலத்திற்கு கவலை அளிக்கும் ஒன்றாகும். இப்பிரச்சினையை முகங்கொடுப்பதற்கான பொறுப்பை சமூக வலைத்தள நிறுவனங்கள் ஏற்க வேண்டும். இணையவெளியிலும் அதற்கு அப்பாலும் சென்று தீர்க்கப்பட வேண்டிய ஒரு ஆழமான சமூக விவகாரமாக இது காணப்படுகிறது.

- இதனை தீர்க்க முனையும் போது நமது கவனம் சமூக வலைத்தளங்களுடன் மாத்திரம் சுருங்கிவிடக்கூடாது என்பதை அவர் வலியுறுத்துகிறார். சிறுபான்மை சமூகங்களின் உரிமைகள் மற்றும் அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மீதும் கவனம் செலுத்தும் வகையிலான ஒரு பரந்துபட்ட பார்வை இங்கு அவசியமாகும். இணைய வெளிக்கு அப்பால் வன்முறைகள் வெடிக்கும் போது மாத்திரம் வெறுப்புப் பேச்சு ஒரு விடயமாக எடுத்துக்கொள்ளப்படக் கூடாது. டிஜிட்டல் (இலத்திரனியல்) வெளியில் மாத்திரம் அது கொண்டிருக்கும் தாக்கம் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், அதுவே இணைய வெளிக்கு அப்பால் நிகழும் செயல்களுக்கு காரணமாக அமைகிறது.

- மக்கள் தமது உணர்வலைகளை வெளிப்படுத்தும் ஒரு தளமாக சமூக வலைத்தளங்கள் இன்று உருவெடுத்துள்ளதுடன் பரந்துபட்ட அனுகூலங்களையும் அது கொண்டுள்ளது. பெருந்தொற்று காலங்களிலும் சரி அல்லது அனர்த்த காலங்களிலும் சரி நிவாரணப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அவை பெரிதும் உதவி புரிவதுடன் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவு மற்றும் ஆதரவுகளை வழங்கவும் உறுதுணையாக அமைந்தது.

- மியன்மாரில் நடைமுறைப்படுத்தப்படும் மலர் உரை (flower speech) என்றழைக்கப்படும் முன்னெடுப்பினை தனசேகர இங்கு உதாரணத்துக்கு எடுத்துக்கொள்கிறார். இது ஒரு வெறுப்புணர்வுப் பேச்சினை கையாளுவதற்கான ஒரு செயற்திட்டமாகும். நல்ல செய்திகளை உரத்துப் பேசவும் வெறுப்புணர்வுப் பேச்சுக்களை எதிர்க்க முன்வருமாறு மக்களை அழைக்கும் இது போன்ற முன்னெடுப்புகள் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டாலும் அவை மிக சொற்பமானவையாக உள்ளதாக அவர் கருதுகிறார். அத்துடன் அவை சிங்கள மொழி பேச்சாளர்களை இலக்கு வைத்துப் பேசவில்லை அல்லது உள்நாட்டு மொழியில் அமைந்திருக்கவில்லை என்றும் அவர் கருதுகிறார்.

*ஜமீலா ஹுஸைன்*

***ஊடகத் துறையில் 10 வருட அனுபவத்தினை கொண்டுள்ள இவர் தற்போதய டெய்லி மிரர் பத்திரிகையின் துணை ஆசிரியராகவும் பணிபுரிகிறார். மோதல்கள் மற்றும் அவற்றினை அடுத்து ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் போது ஊடகவியலாளராக செயற்பட்ட அனுபவத்தினையும் அவர் கொண்டுள்ளார்.***

- ஊடகங்களில் வெறுப்புணர்வுப் பேச்சுக்கள் அண்மையில் தோற்றம் பெற்ற ஒன்றல்ல. தனக்கு நினைவிருக்கும் காலத்திலிருந்தே இவ்வாறுதான் இருக்கிறது என்கிறார்.

- உண்மையானதும் நடுநிலையானதுமான கதைகளை அறிக்கையிடுவதற்கு ஊடகவியலாளர்கள் முயல வேண்டும். முன்னணி ஊடகங்கள் ஒருவர் ஒரு தவறைச் செய்துவிட்டதாக குறிப்பிடும் போது மக்களும் அதனை எந்தக் கேள்வியும் கேட்காது நம்புகின்றனர். முன்னணி ஊடகங்கள் ஒருவரை "குற்றவாளி" என சித்தரித்து அதனை மக்கள் நம்ப ஆரம்பித்த பின்னர் அதனை மாற்றுவது என்பது மிகவும் சிரமம். ஒரு பத்திரிகை ஆசிரியராக அவரது பத்திரிகையில் பதிப்பிக்கப்படும் அறிக்கைகள் முழுமையானதாகவும் துணை ஆவணங்களை உள்ளடக்கியதாகவும் இருப்பதை உறுதி செய்வதில் அவர் பெரிதும் பிரயத்தனம் எடுத்துக் கொள்கிறார்.

- வெறுப்புணர்வுப் பேச்சுக்கள் பெருகுவதற்கு முக்கிய ஊடகங்கள் மாத்திரம் காரணம் அல்ல. அதை விட சமூக ஊடகங்கள் மக்களை விரைவாக சென்றடையும் அளவுக்கு பலமாக உள்ளன என்று ஹுஸைன் குறிப்பிடுகிறார். முக்கிய அச்சு ஊடகங்களில் பணிபுரியும் நிருபர்கள் தகவல்களை மாத்திரமே பதிவிடுகிறார்களே ஒழிய அவர்களது சொந்த முடிவுகளை அல்ல. அந்த கட்டுரைகளுக்கு முன்வைக்கப்படும் கருத்துக்களும் வெறுப்புணர்வுப் பேச்சுக்களை சுமந்திருக்கின்றன. இவற்றின் எதிர்வினைகள் அல்லது அவற்றுக்கு கொடுக்கப்படும் அர்த்தங்கள் என்பன ஒரு ஊடகவியலாளரின் கட்டுப்பாட்டை மீறி நடப்பவைகளாகும்.

- முக்கிய சிங்களப் பத்திரிகைகள் தொடர்ந்தும் பக்கச் சார்பாகவே நடந்துகொள்கின்றன. இனவாத்தை வெளிப்படையாக தெரிவிக்கும் சந்தர்ப்பங்களையும் நாம் காணலாம். முக்கிய விடயங்களை அறிக்கையிட்ட சந்தரப்பங்களில் ஹுஸைன் அவர்களே இதற்கு இலக்காகியிருக்கிறார்கள்.

- அறிக்கைகள் பிரசுரிக்கப்படுகையில் மக்களிடம் இருந்து பெரும்பாலான குற்றச் சாட்டுக்களை எதிர்கொள்ளும் அமைப்புகளாக முக்கிய ஊடகங்களே காணப்படுகின்றன.

- பேச்சுச் சுதந்திரத்தையும் கருத்துத் தெரிவிப்பதற்கான உரிமையையும் அவர் ஏற்றுக்கொண்டாலும், ஒரு வகையில் சமூக ஊடகங்கள் மீதான தடையானது முறுகல் நிலை ஏற்படும் சந்தர்ப்பங்களில் வன்முறைகள் மேலும் பரவாமல் தடுக்கிறது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

- எடுத்துக்காட்டாக, ஈஸ்டர் தாக்குதல்கள் இடம்பெற்ற சில மணி நேரங்களில் முஸ்லிகளைப் பற்றி வெறுப்புணர்வுப் பேச்சுக்கள் எழ ஆரம்பிக்கின்றன. சமூக வலைத்தளங்கள் மீதான தடையே குறிப்பிடத்தக்க அளவு அதை தடுத்து நிறுத்தியது. இந்த வெறுப்புக்கு உள்ளாகி சில காலம் வெளியில் செல்லவே பயப்பட்ட ஒருவர் என்ற வகையில் இந்த தடையானது உதவியாக அமைந்தது என்று அவர் கருதுகின்றார்.

- நிறுவனங்களுக்கும் மக்களுக்கும் இடையில் இருந்து உண்மைகளை தெரிவிப்பவர்களே ஊடகவியலாளர்கள். அங்கு தெரிவிக்கப்படும் கதைகள் தொடர்பில் பொறுப்புடன் நடக்க வேண்டியது மக்களே என்று ஹுஸை ன் கருதுகிறார். உண்மைகளை தெரிவித்தமைக்காகவும் வெறுமனே நிறுவனங்களில் காணப்படும் குறைகளை வெளிக்கொணர்ந்ததற்காகவும் தான் தாக்குதல்களுக்கு முகங்கொடுத்ததாகவும் அவர் விவரிக்கிறார்.

- ஹுஸைன் மற்றும் அவரது குழுவினரும் தாம் வெளியிடும் புதிய செய்திகளின் நம்பகத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதிப்படுத்தும் பொருட்டு மேற்கோள்கள் சிலவற்றை குறிப்பாக உயர் பதவிகளில் இருக்கும் அதிகாரிகளின் மேற்கோள்களை சேர்த்துக் கொள்ள முனைகின்றனர். இருப்பினும், விரைவான செய்திகளை தெரிவிக்கும் நேரங்களில் கிடைக்கும் ஒரு ஆதாரத்தை வைத்துக்கொண்டு அவர்களுக்கு அதனை தெரிவிக்க வேண்டியுள்ளது. தொடர்ந்தும் தகவல்களை சரிபார்த்துக்கொண்டு இருக்கும் அவர்கள் புதிய நிலைமைகள் ஏற்படும் போது தெரிவித்த செய்திகளில் சொல்லப்பட வேண்டிய திருத்தங்களையும் பிந்திக் கிடைக்கும் தகவல்களையும் அவர்கள் வெளியிடுகின்றனர். இது போன்ற நிலைமைகளில் பெரும்பாலான ஊடகங்கள் ஒரே சம்பவத்தை போட்டியாக தெரிவிக்க முனைவதால் அங்கு

யார் முதலில் தெரிவிப்பது என்ற போட்டியிருக்கும். மேலதிக ஆதாரங்களை தேடிக்கொண்டிருந்தால் அடுத்தவர்கள் முந்திவிடுவார்கள் என்ற நிலைமை ஒன்று காணப்படும்.

- செய்தியொன்றை திடீரென வெளியிட்டு விட்டு சிறிது நேரம் கழித்து ஒன்றில் அது அரைகுறையான தகவல் அல்லது தவறான தகவல் என தெரிவிக்கும் பல உதாரணங்களை அவர் சுட்டிக்காட்டினார். நிருபர்கள் வாகன நெரிசலிலோ, படப்பிடிப்புகளிலோ சிக்கிக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் தங்களிடம் இருக்கும் உறுதியான தகவல் மூலத்தை கூட விட்டு விட்டு இவ்வாறு செய்யும் சந்தர்ப்பங்களும் இருக்கவே செய்கிறது.

- இந்தத் துறையில் எதிர்மறையான விடயங்களுக்கே பிரபல்யம் அதிகம். அவரோ அவரது சக ஊடகவியலாளர்களோ ஏதாவது நேர்மறையான விடயங்களை கோடிட்டு காட்ட விளையும் போது அவை பொது மக்களிடையே சர்ச்சைக்குரிய விடயங்கள் எடுபடுவது போன்று பெரிதும் எடுபடுவதில்லை என "ஹஸைன் சுட்டிக்காட்டுகிறார்.

## அமர்வு 03:
## பகிரப்பட்ட வரலாறுகளும் புதிய வெளிகளும்

ஹஸினி ஹபுதன்திரி, இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் (ஐஊநுளு) ஆய்வாளர். கலை முகாமையாளராகவும் சமூக சேர்க்கை, வரலாறு மற்றும் கலாசாரங்களின் சங்கமம் பற்றிய ஆய்வாளராகவும் செயற்படுபவர்.

இந்த அமர்வில் ஹபுதன்திரி அவர்கள் சில தசாப்தங்களாகவே இலங்கை கல்வி முறைமையில் பிரதானமாக கற்பிக்கப்பட்டு வரும் வரலாற்றிலும் பார்க்க சிக்கலான வரலாற்றினுள் அனைவரையும் அழைத்துச் சென்றார். ஒவ்வொரு சமூகக் குழுக்களதும் வரலாறும் கலாசாரமும் ஒன்றுடன் ஒன்று இழையோடும் சந்தர்ப்பங்களையும் அனைவருக்கும் தெரிந்து தனித்துவமான கதைகளையும் அவர் பகிர்ந்து கொண்டார்.

நாம் தற்போது வரலாற்றை முன்வைக்கும் முறை இலங்கையை ஒரு தீவாக சித்தரிப்பதால் நமது வரலாறு ஏனைய நாட்டு வரலாறுகளை விட தனித்துவமானது என்ற புரிதல் வந்துவிடுகிறது. ஆனால் அப்படி இருப்பது சாத்தியமற்றது.

கலை வரலாற்றில் இதற்கு பல எடுத்துக்காட்டுக்களை நாம் காணலாம் :

- இராவணனின் உருவப் பயன்பாடு - தீவிர சிங்கள தேசியவாத அடையாளத்தை கட்டியெழுப்ப பயன்படுத்தப்படும் உருவம் - கம்போடியாவிலும் கூட பதிவு செய்யப்பட்டுள்ளது.
- தெற்கு மற்றும் தென் ஆசிய பிராந்தியத்தில் இடம்பெற்ற சோழ ராஜ்யத்தின் விரிவாக்கம் அங்கிருந்த நாடுகள் அனைத்திலும் அதன் கலாசார அடிப்படைகளை கொண்டு சேர்த்தது. இதன் விளைவு, இப்பிராந்தியம் முழுவதற்குமான ஒரு பொதுவான வரலாற்றை இது உருவாக்கியுள்ளது.
- கத்தோலிக்க குறியீடுகளில் ஒன்றாக சிலுவை அடையாளம் - பௌத்த நாகரீமாக அடையாளப்படுத்தப்படும் - அநுராதபுர கால தூபிகளில் காணப்படுகின்றமை.
- கணிசமான இந்து கலை மற்றும் கட்டட வடிவமைப்புகள் அநுராதபுரம், பொலனறுவை இராசதானிகளில் கட்டடக் கலை வடிவங்களில் காணப்படுகின்றமை.

- சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் பிராமண தாக்கங்கள் இருத்தல்
- தமிழ் ஓலைச்சுவட்டு எழுத்து வடிவங்கள் சிங்கள எழுத்துவடி உருவாக்கங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளமை

வரலாற்றை உன்னுடையது என்னுடையது என பிரித்துப் பார்ப்பதற்கான வரையறைகள் எதுவும் கிடையாது. இன்று சமூகத்தில் வழக்கிலிருக்கும் அடையாள பிரிப்புகளை நாம் அமுல்படுத்த முடியாது. இது முழுக்க முழுக்க அறியப்படாத ஒரு வரலாறு அல்ல. அது மைய நீரோட்டத்திற்குள் வெளித்தெரியாமல் போய்விட்டது.

இத் தீவின் வரலாறு உலகளாவிய தாக்கங்களினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாகவே அது பல்வேறு கலாசாரங்களையும் மதங்களையும் அதன் கரையோரப் பகுதிகளில் வர்த்தகத்திற்காக வரவேற்றதே ஒழிய காலனித்துவத்தினால் மாத்திரம் அல்ல. உதாரணத்திற்கு, தொலமி இத்தீவினை தனது வரைபடத்தில் “தப்ரோபேன்“ என காட்டியுள்ளார். வர்த்தக மற்றும் கடல் மார்க்கத்தின் பிராந்திய முக்கியத்துவம் கருதி அதனை இந்திய துணைக் கண்டத்தினை விட பெரியதாகவும் காட்டியுள்ளார்.

இலங்கை தன்னைச் சுற்றி நடப்பவை பற்றி எதுவித துலங்கலையும் செய்யாது இருந்ததாக சில குறிப்பிடுகள் காணப்படும் அதே நேரம் அது பிராந்திய அரசியலில் குறிப்பிடத்தக்க பாத்திரத்தை கொண்டிருந்ததாகவும் குறிப்புகள் உள்ளன. இலங்கையில் பிறந்து இந்தியாவில் வளர்ந்து பல்லவ நீதிமன்றங்களில் அங்கத்தவராகவும் இருந்து பல்லவ வம்சாவழி முறுகல்களில் அவர்களுடன் இணைந்து போராடிய ஒரு மன்னரே நாளந்தா கெடிகே சிலை மண்டபத்தினை கட்டினார்.

“இதுவே எங்கள் மரபு. நாம் ஒரு திறந்த சமூகம். அடுத்த நாடுகளுடன் பேச்சுவார்த்தை செய்வது, அடுத்த நாடுகளில் இருந்து கடன் பெறுவது, மற்றவர்களுக்கு உத்வேகம் அளிப்பவர்களாகவும், மற்றவர்களால் ஈர்க்கப்பட்டவர்களாகவும் நாம் இருக்கிறோம்“

“ஒரு தளத்தின் பயன்பாடு மாற்றமடையும் போது அதன் கதையும் காலப்போக்கில் மாறிப்போய்விடும்”

- “நய் பென விஹாரை” பற்றிய குறிப்புகளில் பௌத்த தளங்கள் இந்துத் தளங்களாக மாறியுள்ளது.

- தலதா மாளிகையில் காணப்படும் பௌத்த தளமான "மகுல் மடுவ" கண்டி திரித்துவக் கல்லூரியின் ஆராதனை மண்டபம் அமைக்கப்படுவதற்கும், சுதந்திர சதுக்கம் அமைக்கப்படுவதற்கும் ஒரு முன்மாதிரியாக அமைந்தது.
- கரையோரங்களில் அமைக்கப்பட்டுள்ள பரோக் கட்டிடக் கலையைத் தழுவி ஆலயங்கள், பள்ளிவாசல்கள் கிறிஸ்தவ ஆலய வடிவமைப்புகளை முன்மாதிரியாக கொண்டும் காணப்படுகின்றன.

"கடன் பெறுவது, கொள்வனவு செய்வது, பேச்சுவார்த்தை செய்வது என்பது ஒரு வரலாற்று நடைமுறையாக அடையாளப்படுத்தப்படுகிறது. அப்போதைய காலத்தில் அனைத்தும் அமைதியாக இடம்பெற்றதாக கருதினால் அது தவறான புரிதலாக அமையும். கண்டிப்பாக அங்கு முறுகல் நிலை, கூட்டுச் சேர்தல் மற்றும் தொடர்ந்தேர்ச்சியான நிலை என்பன அங்கிருந்தது".

## சிக்கலான வரலாறுகள்

இலங்கை வரலாறோ அல்லது வேறு எந்த நாட்டினதும் வரலாறோ எளிதானல்ல என்பதை ஹுபுதன்திரியின் ஆய்வுகள் விளக்குகின்றன. ஆனால் அவைகள் அனைத்தும் ஓரங்கட்டப்பட்டு ஒரே கதை மட்டும் வழிவிடப்பட்டுள்ளது. இலங்கையின் வரலாறு மகாவம்சத்தை மாத்திரம் அடியொட்டி சொல்லப்பட்டு வருவதால் இலங்கை வரலாற்றை வடிவமைக்கும் பலதரப்பட்ட குறிப்புகள் புறந்தள்ளப்பட்டுள்ளன.

"நாம் வரலாற்றை அனைத்தையும் உள்ளடக்கி போதிக்க ஆரம்பிக்க வேண்டும். அது சகிப்புத் தன்மை மிக்க அடையாளத்தை உருவாக்க வழிவகுக்கும். கூடவே, நாம் இப்போது தீர்க்க நினைக்கும் வெறுப்புணர்வுப் பேச்சுக்களையும் நெறிப்படுத்த உதவும் .

"இலங்கை அடையாளம்" என அதிகம் பேர் இப்போது குறிப்பிடுகிறார்கள். அப்படி என்றால் என்ன என ஹுபுதன்திரி கேள்வி எழும்பும் அதே நேரம், ஒரு நாட்டின் வரலாற்றை அவர்கள் இப்போது தம்மை எவ்வாறு வரையறை செய்கிறார்கள் என்பதை வைத்து பிரித்துப் பார்க்க முடியாது எனவும் குறிப்பிடுகிறார்.

வரலாறு என்பது திரும்பத் திரும்ப சொல்லப்படுவதால் உருவாகிறது. அதனால் ஒரு உண்மையை வலிறுத்துவது என்பது சாத்தியமற்றது. நம்பகத்தன்மை மீதுள்ள ஆவேசம் வரலாறு பற்றிய நமது புரிதலுக்கு தடையாக இருப்பதுடன் வரலாறு

என்றால் என்ன என்று நாம் கற்பனை செய்து வைத்திருப்பதையும் மாற்றம் செய்ய வைக்கிறது.

வரலாற்றை எழுதுவதென்பது ஒன்றும் திறந்தவொளியொன்றில் ஏதோ உடற்பயிற்சி செய்வது போன்றதல்ல. அதனைப் படிப்பவர்களது பல பரிமாணங்களை பற்றி மதிப்பிடுவதும் தான் அதனை முன்வைக்கும் காலம் பற்றியும் கோட்பாடுகளில் அது எவ்வாறு தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது பற்றி மதிப்பிடுவதும் வரலாற்றாசிரியர் ஒருவரது பொறுப்பாகும்.

## பிரத்தியேக கதைகள்

சிங்கள மற்றும் தமிழ் தேசியவாதிகளால் புத்தாக்க வடிவில் விவரிக்கப்படும் விடயங்களே வரலாறுகளாக இங்கு மீண்டும் எழுதப்படுகிறது. ஒவ்வொரு சாராரும் தமது சொந்த கதைகளை பரப்பும் நோக்குடனேயே இதனை செய்கின்றனர். தமது சொந்த சித்தாந்தங்களுக்கு அமைவாக கட்டுக்கதைகளை புனைந்து வடிவமைத்துள்ளார்கள்.

பன்முக கலாசாரம் மற்றும் கலப்பின பகுதிகள் வாழ்வின் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்றன. இவையே வரலாற்றின் படிமுறைப் போக்கினை தெளிவாக சுட்டிக்காட்டும் சுட்டிகளாகவும் இருக்கின்றன.

- கதிர்காமம் - ஒன்றுடன் ஒன்று நல்லிணக்கமாக செல்லும் மதங்களின் பல்வகைத் தன்மைக்கு
- மன்னார், பத்தலங்குன்டுவ, பானமை - தனிப்பட்டவர்களிலும் சரி குடும்பங்களிலும் சரி கலப்பினமாக இருப்பதால் இனங்கள் சேர்ந்திருக்க

“இந்த யோசனைகளை மறுபடியும் திரும்பவும் ஸ்தாபிக்காது அவற்றை சவாலுக்குட்படுத்தி அவற்றை சிதறடிக்க வரலாறு நமக்கு உதவும். நவீன அடையாள வகைப்படுத்தல்கள் முன்னால் எவ்வளவு பொருந்தாதவையாக இவைகள் உள்ளன என்பதை கேள்விக்குட்படுத்த அது உதவும். நாம் இப்போது இருப்பதை மிகச் சிறந்த பெரியதொரு விடயத்துடன் தொடர்புடையவர்கள் என்பதை அனைவரும் புரிந்து கொள்ளவும் இது தூண்டும் .

## வெறுப்புணர்வுப் பேச்சின் வேர்கள்

வெறுப்புணர்வுப் பேச்சினை வளர்த்தலானது அச்சமும் பாதுகாப்பின்மையும் கூடியிருப்பதனாலாகும். வரலாறு ரீதியானதோ அல்லது வேரூன்றிய ஒன்றோ அல்ல. ஆயினும் இந்த அச்சம் எவ்வாறு இலகுவாக எழுப்பப்பட்டு பின் அவை வன்முறையாக மாற்றப்படுகிறது என்ற கேள்வி எழலாம். இதற்குக் காரணம் பாகுபாடும் தனித்துவ அடையாளங்களுமாகும். இவை மற்றொரு சாராரை ஒருவிதமாக பார்க்க தூ ண்டுகிறது. வரலாற்றினால் கட்டமைக்கப்பட்டுள்ள இத்தகையொரு சூழலில் இவை இலகுவாக சாத்தியப்படுகிறது.

இந்த பாகுபாட்டு மனநிலை வலுவாக இல்லாத போது குறித்ததொரு சமூகக் குழு பற்றி தெரிவிக்கப்படும் விடயங்கள் தொடர்பில் மக்கள் கேள்விகளை கேட்டு அதற்கான துலங்கல்களை செய்வார்கள். இந்த மனோநிலையானது நீண்ட நெடுங்காலமாகவே சமூகமயமாக்கல் மூலம் கட்டமைக்கப்பட்டுவிட்டது.

வெறுப்பு வளர்க்கப்படும் ஒரு சூழலில் இன்று நாம் பார்க்கும் வெறுப்புணர்வுப் பேச்சு இடம்பெறாதிருந்திருந்தால், அதற்குப் பதிலாக நேர்மறையாக விடயங்கள் அங்கு வரலாறு நெடுகிலும் முன்னிறுத்தப்பட்டிருக்கும், பாகுபாடு மற்றும் வன்முறையில் இருந்து மாறுபட்ட மக்கள் வகையினர் அங்கு இருந்திருப்பார்கள்.

சிறந்த வரலாற்றை சொல்லவும் வெறுப்புணர்வுப் பேச்சுக்களை கையாளவும் கல்வியை பயன்படுத்தல்

- அனைத்தையும் உள்ளடக்கிய வரலாற்றினை எழுதவல்ல அனைத்து தரப்பினையும் உள்ளடக்கிய வல்லுனர் குழுவினரைக் கொண்டு சகல விடயங்களையும் உள்ளடக்கிய பாடசாலை பாடத்திட்டத்தை வரைய முடியும். இந்த படிமுறையில் பல்வகைத் தன்மை குரல்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

- கற்பித்தல் ஏகாந்தமாக நடைபெறக்கூடாது. பாடங்களை கலை என்றும், கலை வரலாறு என்றும் வரலாறு மற்றும் தொல்பொருளியல் என பிரிக்கக்கூடாது. அவ்வாறு செய்வது உலகம் பற்றிய பல பரிமாண புரிதலை பெற முயலும் போது அது பற்றி ஒரு மொத்த வடிவத்தினை இழக்க காரணமாக அமையும்.

- மொழிக் கற்கைகள் மிக அவசியமாகும். வெறுப்புணர்வுப் பேச்சுக்கள் மொழியை அடிப்படையாக வைத்தே உருவாகிறது. ஒருவர் மற்றொருவரை அழைக்கும்

வார்த்தைகளையும் அவற்றைப் பிரயோகித்து மற்றவர்களை அழைக்கும் போது அதன் அர்த்தம் என்ன என்பதை அறிவதற்கு நமக்கு இயலுமாக இருக்க வேண்டும்.

*“வெறுப்புணர்வுப் பேச்சுக்களை எதிர்கொள்வதற்கு எமது சமூகத்தில் நாம் பயன்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்களில் பொதிந்திருக்கும் ஆழமான அர்த்தங்கள், படிநிலைகள், பாகுபாடுகள் பற்றிய புரிதல் அவசியமாகும். எமது வரலாற்றை உருவாக்க பலதரப்பட்ட கதைகளையும் ஒன்று சேர்க்க வேண்டும். அது ஒரு முழுமையான ஒன்றாக இருக்காவிட்டாலும் நாம் வரலாற்றை அவ்வாறுதான் நோக்க வேண்டும். இது ஒரு முழுமையாக வரலாற்றை அறிய நமக்கு உதவியாக இருக்கும் .*

## அமர்வுகள் 4 ரூ 5:
## நடவடிக்கை எடுத்தல்! டிஜிட்டல் யுகத்தில் தர்க்க ரீதியான சிந்தனை


*ஹாஷ்டெக் தலைமுறை (Hashtag Generation)*

***இளைஞர்கள், குறிப்பாக இளம் பெண்கள் மற்றும் சிறுபான்மை குழுக்களைச் சேர்ந்த இளைஞர்களின் அர்த்தமுள்ள சிவில் மற்றும் அரசியல் பங்கேற்புக்காக குரல் கொடுக்கும் இளம் தொழில்நுட்ப ஆர்வலர்கள், சமூக உணர்வுள்ள இலங்கையர்களின் குழுவால் வழிநடத்தப்படும் இயக்கம் இதுவாகும்.***

**நெத்மினி மெடவல - நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளர்**
**செனெல் வன்னியாராச்சி - பணிப்பாளர் இணை ஸ்தாபகர்**
**தர்'த கமகே - தலைமை அதிகாரி பயிற்சி மற்றும் வளங்களை திரட்டுதல்**

### இலங்கையின் இணைய பரப்பு

சமூக ஊடகங்களைப் பற்றி தர்க்க ரீதியாக சிந்திக்கும் போது இலங்கையில் இணையப் பயன்பாட்டைப் புரிந்து கொள்ள வேண்டும். ஜனவரி 2021 முதல் சமூக ஊடகங்களில் சுமார் 10.9 மில்லியன் பயனர்கள் உள்ளனர். இது கிட்டத்தட்ட நாட்டின் மக்கள் தொகையில் அரைவாசியாகும். கொவிட்-19 காரணமாக, இணைய பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது் ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகள் மூலம் இணையத்தில் பயன்படுத்தும் பயனர்களின் சதவீதம் 98.7மூ . இது வலையமைப்பை உடனடியாக அணுகும் பயனர்களின் எண்ணிக்கையைக் காட்டுகிறது. கூகுள், யூடியூப், பேஸ்புக், சூம், கிசுகிசு தளங்கள், செய்தித் தளங்கள் மற்றும் ஆபாசத் தளங்கள் ஆகியனவே பயனர்களால் அதிகம் பார்வையிடப்படுவதாக தரவுகள் காண்பிக்கின்றன.




JAN 2021

## TOP WEBSITES BY TRAFFIC (ALEXA)

RANKING OF TOP WEBSITES BASED ON TOTAL TRAFFIC VOLUME IN DECEMBER 2020, ACCORDING TO ALEXA*


SRI LANKA

| # | WEBSITE | TIME / DAY | PAGES / DAY |
|---|---|---|---|
| 01 | GOOGLE.COM | 15M 41S | 17.02 |
| 02 | YOUTUBE.COM | 17M 23S | 9.86 |
| 03 | GOOGLE.LK | 6M 49S | 8.71 |
| 04 | FACEBOOK.COM | 18M 47S | 8.82 |
| 05 | ZOOM.US | 8M 14S | 3.93 |
| 06 | ALIEXPRESS.COM | 10M 17S | 8.73 |
| 07 | IKMAN.LK | 13M 18S | 9.99 |
| 08 | HIRUFM.LK | 8M 38S | 4.00 |
| 09 | YAHOO.COM | 5M 08S | 4.74 |
| 10 | EBAY.COM | 10M 03S | 7.94 |
| 11 | WIKIPEDIA.ORG | 3M 48S | 3.10 |
| 12 | DARAZ.LK | 9M 46S | 7.25 |
| 13 | XHAMSTER.COM | 12M 58S | 9.59 |
| 14 | HIRUNEWS.LK | 8M 11S | 4.27 |
| 15 | GOSSIPLANKANEWS.COM | 7M 16S | 3.89 |
| 16 | TAMILWIN.COM | 5M 42S | 3.30 |
| 17 | MICROSOFT.COM | 4M 29S | 3.32 |
| 18 | AMAZON.COM | 10M 40S | 9.94 |
| 19 | ADADERANA.LK | 5M 17S | 3.37 |
| 20 | SLT.LK | 3M 23S | 2.58 |

27 SOURCE: ALEXA (JAN 2021). *NOTES: 'ALEXA' IS THE NAME OF AMAZON'S INSIGHTS ARM, AND DATA SHOWN HERE ARE NOT RESTRICTED TO ACTIVITIES ON 'ALEXA' VOICE PLATFORMS. VALUES FOR "TIME / DAY" AND "PAGES / DAY" REPRESENT ALEXA'S ESTIMATES OF AVERAGES FOR GLOBAL VISITORS, NOT JUST LOCAL MARKET VISITORS. "TIME / DAY" VALUES REPORTED IN MINUTES AND SECONDS. ADVISORY: SOME WEBSITES FEATURED IN THIS RANKING MAY CONTAIN ADULT CONTENT. PLEASE USE CAUTION WHEN VISITING UNKNOWN WEBSITES.

we are social · Hootsuite

**போலிச் செய்தி என்றால் என்ன?**




...............................................................

1. தவறான தகவல் - இந்த உள்ளடக்கத்திற்கு தீங்கு விளைவிக்கும் நோக்கம் இல்லை மற்றும் யாரையும் தவறாக வழிநடத்த முயற்சிக்கவில்லை.

2. தீங்கான தகவல் - இவை தீங்கு விளைவிக்கும் நோக்கம் கொண்டவை் உள்ளடக்கத்தின் சில பகுதிகள் உண்மையாக இருக்கலாம்.

3. பிழையான தகவல் - இவை பொய்யான தகவல் அவை தெரிந்து கொண்டே தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டவை.

## உங்கள் சமூக ஊடகங்களில் நீங்கள் பார்க்கும் கதைகள் கட்டுப்படுத்தப்படுகின்றனவா?

சமூக ஊடகங்களின் வளர்ச்சியுடனும் தகவல்களின் அதிகரிப்புடனும் கோட்பாட்டளவில் பயனர்கள் அதிகளவு அறிவூட்டப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், சமூக ஊடகங்களில் நீங்கள் காணும் பெரும்பாலான உள்ளடக்கங்கள், நீங்கள் ஏற்கனவே நம்புகின்ற, சிந்திக்கின்ற விடயத்தைப் பற்றியும் மேலும் வலுப்படுத்துபவைகளாகவே உள்ளன. ஏனென்றால், தளங்களின் வழிமுறைகள் (யடபழசவைாஅள) நீங்கள் கவனிக்கும் உள்ளடக்கத்தைக் கண்காணிக்கும் வகையிலும் உங்கள் உள்ளடக்கத்திற்கு ஒத்த உள்ளடக்கத்தைக் கொண்டு வரும் வகையிலுமே வடிவமைக்கப்பட்டுள்ளன.

## சமூக ஊடகங்களில் நாம் பார்க்கும் பெரும்பாலான உள்ளடக்கங்கள் தீங்கு விளைவிப்பவையா?

பெரும்பாலான உள்ளடக்கங்கள் தீங்கு விளைவிக்க வேண்டும் எனும் அவசியம் இல்லை, ஆனால் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கம் சிறப்பாக செயல்படுகிறது என்றும் வழிமுறைகள் (algorithms) மூலம் நம்மை சிறப்பாக வந்தடைகிறது என்றும் தரவுகள் காண்பிக்கின்றன. இதன் பொருள் நாம் அதிக தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தைக் காண முடியும் என்பதாகும். இந்த ஒன்லைன் யதார்த்தமானது பயனர் மற்றும் அவர்கள் வழக்கமாக உலாவும் உள்ளடக்கத்தின் வகையைப் பொறுத்ததாகும்.

## பால்நிலை மற்றும் வெறுப்புணர்வுப் பேச்சு

வெறுப்புணர்வுப் பேச்சின் பெரும்பான்மையான இலக்குகளாக பெண்களே உள்ளதாகவும் இதை உருவாக்குவதில் ஆண்களே அதிகம் ஈடுபடுவதாகவும் வெறுப்புணர்வுப் பேச்சு பற்றிய தரவுகள் காண்பிக்கின்றன.

## ஒருங்கிணைந்த முறையற்ற நடத்தை

பல கணக்குகள் ஒரே நேரத்தில் ஒரே விதமான உள்ளடக்கத்தை வெளியிடுகின்றன. இது வெறுப்புணர்வுப் பேச்சின் உள்ளடக்கத்தை செயற்கையாக தயாரித்து உருவாக்க பயன்படுத்தப்படும் உத்தியாகும். தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் அல்லது அரசியல் கட்சிகளை குறிவைக்க இந்த தந்திரோபாயம் பயன்படுத்தப்படுகிறது. சமூக ஊடகப் பக்கங்களின் உரிமையாளர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதன் மூலமும், இதை ஒருங்கிணைப்பதன் மூலமும் ஏற்படும் விளைவே இதுவாகும். பேஸ்புக் போன்ற சமூக ஊடக தளங்கள் இந்த வகையான பதிவுகளை தங்கள் தளத்திலிருந்து அகற்ற முயற்சிக்கின்றன.

## தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்துடன் நமது பங்கு என்ன?

- கவனமாக இருங்கள் பதிலளிக்க வேண்டாம்

  தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்துடன் நீங்கள் தொடர்புபடும் தருணத்தில், பக்கங்களின் வழிமுறைகள் (யடபழசவைாஅள) இந்த உள்ளடக்கத்தை பிரபல்யமானவையாக அடையாளம் காணும் அத்துடன் உள்ளடக்கம் தானாகவே குறித்த தளத்தில் சிறப்பாக செயல்படும்.

- சரிபார்க்கவும்

  சில நேரங்களில் உள்ளடக்கம் வெளியிடப்பட்ட திகதியைப் பார்ப்பது உங்களுக்கு உதவலாம். முந்தைய அமர்வில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய கருவிகளும் இதற்காக பயன்படுத்தப்படலாம்.

- முறையிடுங்கள் (Report)

  ஒவ்வொரு சமூக ஊடக தளமும் சமூக வழிகாட்டல்களின் தொகுப்பைக் கொண்டிருக்கும். எனவே குறிப்பிடப்பட்ட சரியான வகையின் கீழ் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தைப் பற்றி முறையிடுவது முக்கியம்.

- தர்க்க ரீதியான பகுப்பாய்வு

  தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கம் வெளியிடப்பட்ட சந்தர்ப்பம் பற்றி சிந்திப்பதும் முக்கியம். உதாரணமாக, இந்த வகை உள்ளடக்கம் வெளியிடப்பட்டதன் பின்னணியில் உள்ள என்ன காரணம் ?

- கூற்றுகள் மற்றும் இணையத்தளங்களின் உரிமையாளர்கள் தொடர்பான சரிபார்த்தல் கருவிகள் தொடர்பில் மேலும் அறிந்து கொள்ள யூடியூபில் இந்த வீடியோ இணைப்பை பாருங்கள்.

  Fact-Checking Tools — Video 2 (Looking up Claims and Website Owners

**சுருக்கமாக, சிந்திப்பதற்கென சில கேள்விகள்:**

- கூற்று உண்மையா?

  உள்ளடக்கத்தை வெளியிடும் வலைத்தளம் சந்தேகத்திற்குரியதாகத் தோன்றினால், அதற்கு நம்பகத்தன்மை இருக்காது. இலகுவான வழி என்னவெனில், அதே உள்ளடக்கத்தை வேறு எங்கு காணலாம் என்று கண்டுபிடிக்க குறித்த ஆக்கத்திலிருந்து சில வாக்கியங்களை பிரதி செய்து, புழுழபடந தேடலை மேற்கொள்ளவும்.

- இணையத்தளம் யாருடையது?

  www.domainbigdata.com என்பது தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தை வெளியிடும் ஒரு வலைத்தளத்தின் உரிமையாளரைப் பற்றிய மேலதிக தகவலைக் கண்டுபிடிக்கப் பயன்படும் ஒரு பயனுள்ள தளமாகும். தளத்தில் காணப்படும் தகவல்களின் அடிப்படையில் வெளியீட்டாளரின் நம்பகத் தன்மையை நீங்கள் தீர்மானிக்க முடியும்.

**கொரோனா வைரஸ் தொற்று நோய்களின் போது இணையத்தில் போலி செய்திகளை முறியடிப்பதற்கான 10 வழிகள்.**

1. **கவனத்தை ஈர்க்கும் தலைப்புகளைக் கவனியுங்கள்**

தலைப்புகள் கவனத்தை ஈர்க்கும் நோக்கிலும் இணையத்தளத்துக்கு அதிக வருகைகளை பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் வடிவமைக்கப்படுகின்றன. இது உரிமையாளருக்கு விளம்பர வருமானத்தை அதிகரிக்கிறது. பயனர்களாகிய நாங்கள் இந்த கட்டுரைகளை கிளிக் செய்யவோ அல்லது பகிரவோ தூண்டப்படுகிறோம். எனவே இணையத்தில் உள்ள ஏனைய கட்டுரைகளுக்கு மத்தியில் இவற்றை அடையாளம் காண்பது முக்கியமாகும்.

இந்த தலைப்புகள் உங்கள் ஆர்வத்தை அதிகரிப்பதுடன் உங்களைத் தூண்டும். அவர்களை எதிர்ப்பதற்கு மாறாக, அவர்களை அடையாளம் காண எளிதான வழி 'name to tame it' முறையாகும். உளவியலாளர் டாக்டர் டான் சீகல் இந்த முறையை கட்டுரை உங்களுக்குத் தூண்டும் உணர்ச்சியை மூளையின் பகுத்தறிவுப் பக்கத்தில் அடையாளம் காண ஒரு வழியாக விளக்குகிறார். இது பயத்திலிருந்து பதற்றம் முதல் மகிழ்ச்சி வரை இருக்கலாம்.

2. **தவறாக வழிநடாத்தும் அதிசய மருந்துகள் மற்றும் சூழ்ச்சிகள் குறித்து அறியுங்கள்**

தொற்றுநோய்களின் போது, வைரஸ் தொடர்பான சிகிச்சைகள் மற்றும் சூழ்ச்சிகளை வழங்குவதாக கூறும் உள்ளடக்கத்தில் அதிகரிப்பு இருந்தது. சில நகைச்சுவைகள் மட்டுமல்ல, அவை ஆபத்தானவையும் கூட. குறிப்பாக பேஸ்புக்கில் கொரோனாவை குணமாக்கும் கலவைகளுக்கான சமையல் குறிப்புகளுடன் பகிரப்படும் கட்டுரைகளைக் குறிப்பிடலாம். இதைக் கண்டறிவதற்கான எளிய வழி, கூகுள் தேடலில் செய்திப் பகுதியை அணுகுவது ஆகும். அங்கு நீங்கள் இந்த தலைப்பில் மிகவும் புதுப்பிக்கப்பட்ட செய்தி கட்டுரையை பார்க்கலாம்.

3. **"நண்பனின் நண்பன்" என்பது நம்பகமான ஆதாரம் அல்ல**

வாட்ஸ்அப் குழுக்களில் "ஒரு நண்பர் அனுப்பினார்" அல்லது "உடனடியாகப் பகிரவும்" என்ற தலைப்பில் செய்திகளைப் பகிரும் போக்கு அதிகரித்து

காணப்படுகிறது. இந்த தலைப்புகள் விரைவில் செய்தியைப் பகிர வேண்டும் எனும் பொறுப்பை தோற்றுவிக்கின்றன. அதிகமானோர் பகிர்வதற்காக குழுவில் நம்பகத் தன்மையை உருவாக்குவதற்காக, "இந்த செய்தி எனது மாமாவிடமிருந்து அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது." என்று கூறுவதன் மூலம் ஒரு இணைப்பு உருவாக்கப்படுகிறது.

இதை கண்டறிய, வாட்ஸ்அப்பில் ஒரு புதிய அம்சம் உள்ளது, இது ஒரு செய்தி பல முறை அனுப்பப்பட்டதா என்பதைக் காட்டுகிறது. இந்த விடயங்களை மெசேஜிங் செயலிகளில் கட்டுப்படுத்துவது கடினம் என்பதால், செய்திகளை பரப்புவதற்கு முன் சரிபார்க்க வேண்டியது அவசியம்.

## 4. பகிரப்பட்ட செய்திகளின் திகதியைச் சரிபார்க்கவும்

ஒரு செய்தியின் முடிவில் "கிடைத்ததை பகிர்வதாக" என குறிப்பிடுவது உங்களைப் பொறுப்பிலிருந்து விடுவிக்காது. 2020 ஆம் ஆண்டில் (பாராளுமன்றத் தேர்தலுக்கு சமீபமாக) உலக சுகாதார நிறுவனத்தின் உலக சுகாதார தரப்பட்டியலில் இலங்கை முதல் இடத்தில் இருப்பதைக் காட்டும் ஒரு கட்டுரை பகிரப்பட்டது. இந்த செய்தியானது தொற்றுநோயை உலகிலேயே இலங்கைதான் சிறப்பாக நிர்வகிக்கிறது என்ற அபிப்பிராயத்தை பொதுமக்களுக்கு ஏற்படுத்தியது. இருப்பினும் அதன் அசல் உள்ளடக்கம் 2018 இல் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரையாகும், அதில் இலங்கையின் சுகாதாரத்துறை உலக சுகாதார நிறுவனத்தினால் பாராட்டப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

## 5. ஒரு நம்பகமான அமைப்பின் சின்னம் உள்ளது என்பதற்காக, அது எப்போதும் உண்மை என்று அர்த்தம் இல்லை.

சில கணக்குகள் சரிபார்க்கப்பட்ட பக்கங்களின் உள்ளடக்கத்தைப் பிரதிபலிக்கின்றன் இந்த நிறுவனங்களின் உத்தியோகபூர்வ வலைத்தளங்கள் அல்லது சமூக ஊடக பக்கங்கள் மூலம் செய்திகளைத் தேடுவதன் மூலம் இதை கண்டறியலாம். அவர்களின் நம்பகத் தன்மையைக் காட்டும் "சரிபார்க்கப்பட்ட குறியீடுகளை கவனிப்பதை உறுதி செய்யவும்.

### 6. இது நம்பகமானதாக தோன்றுகிறதா?

சில நேரங்களில் உள்ளடக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இலக்கணம் மற்றும் மொழியைப் பற்றிய ஒரு எளிய கண்ணோட்டம் அதன் நம்பகத் தன்மையை கண்டறிய இலகுவாக இருக்கும்.

- Google reverse image தேடல் இதைத் தீர்க்கப் பயன்படும் ஒரு கருவியாகும். படத்தில் வலதுபக்கம் கிளிக் (right click) செய்வதன் மூலம் அதன் படத் தேடலை மேற்கொள்ள முடியும். படம் காண்பிக்கப்படும் அல்லது பதிவேற்றப்பட்ட இடத்திற்கான தெரிவுகளை இது உங்களுக்கு வழங்கும். நீங்கள் சரிபார்க்க விரும்பும் ஒரு படத்தை பதிவேற்றலாம் மற்றும் அதைத் தேடலாம்.

- https://archive.org/ ஊடாக இணைய காப்பகங்களில் தேடவும். நீங்கள் தேட விரும்பும் கட்டுரையின் இணைப்பை இதில் நீங்கள் பதிவேற்றலாம் மற்றும் அசல் பதிவு முன்னர் திருத்தம் செய்யப்பட்டுள்ளதா என பார்க்கலாம். பதிவு வலைத்தளங்களில் காப்பகப்படுத்தப்பட்ட நேரத்தையும் இது காண்பிக்கும். எனினும் வலைத்தளத்தின் நிர்வாகி அதன் உட்தளத்திலிருந்து பதிவை திருத்த முடியும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

- https://citizenevidence.amnestyusa.org/ வழியாக அம்னஸ்டி வீடியோ வீவர் ஊடாக வீடியோக்களைத் தேடுங்கள். இந்தக் கருவி யூடியூப் வீடியோக்களைக் கண்டுபிடிக்கவும் அவற்றின் தகவல்களைத் தேடவும் உதவும்.

### 7. பின்னூட்டங்கள் (comments) பகுதிகளைப் பாருங்கள்.

அதே தளத்தில் மற்றவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை அறிய இது ஒரு வாய்ப்பாக இருக்கலாம். ட்ரோல்களை (trolls) கண்டால் கவனமாக இருங்கள். சந்தேகத்திற்குரிய கணக்குகள் அல்லது போலி கணக்குகள் “ட்ரோலிங்“ செய்யப்படுகின்றன, மேலும் அவர்களுடன் தொடர்பாடலில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது.

## 8. ஏதேனுமொரு நிகழ்ச்சி நிரல் உள்ளதா?

போலிச் செய்தி கொண்டிருக்கும் உள்ளடக்கத்தின் சூழலை இங்கே நாம் பார்க்க வேண்டும். அவர்கள் ஒரு பொருளை விற்க முயற்சிக்கிறார்களா அல்லது ஒரு அரசியல்/ பொருளாதார நிகழ்ச்சி நிரல் உள்ளதா? சில நேரங்களில் போலிச் செய்திப் பக்கங்கள் ஒரு தீவிர தேசியவாத பரப்புரைகளை கொண்டிருக்கும். அவர்கள் ஒரு சமூகத்தின் மாறாநிலையை ஒரு யோசனையாகக் காட்டி, மக்களை அதற்குள் பாதுகாப்பாக உணர வைக்கிறார்கள். இது உள்வாங்குவதை எளிதாக்குவதுடன் வெறுப்புணர்வுப் பேச்சுக்கு இட்டுச் செல்கிறது. இந்த உள்ளடக்கத்தை நுகராமல் தவிர்ப்பது முக்கியமானது. அத்துடன் அவற்றை வெறுமனே கடந்து செல்லாமல் அவற்றை அடையாளம் கண்டு சமூக ஊடகப் பக்கங்களில் முறையிடுவது முக்கியம்.

## 9. உண்மை சரிபார்ப்பவர்கள் என்ன சொல்கிறார்கள்?

உண்மையை சரிபார்க்கும் நிறுவனங்கள் மற்றும் பக்கங்கள் உள்ளடக்கத்தை ஆய்வு செய்வதிலும், அவை வெறுப்புணர்வுப் பேச்சு வகைகளின் கீழ் வந்தால் அது பற்றி அறிக்கையிடுவதிலும் தீவிரமாக பணி புரிகின்றன. சுயாதீன உண்மைச் சரிபார்ப்பு நிறுவனங்களால் பரிசீலிக்கப்பட்ட பின்னர் குறித்த உள்ளடக்கத்தை "தவறான தகவல்" என்று லேபிள் செய்ய அனுமதிக்கும் அம்சங்களையும் பேஸ்புக் கொண்டுள்ளது. இந்த அம்சங்கள் எல்லா நேரங்களிலும் குறித்த தளங்களில் வேலை செய்யாது. ஆனால் அவை சரியான திசையைக் காண்பிக்கும் பயனுள்ள படிகளாகும்.

நீங்கள் பின்தொடர வேண்டிய சில உண்மை சரிபார்க்கும் நிறுவனங்கள் :

- https://www.facebook.com/hashtaggenerationsl/
- https://factcheck.afp.com/afp-sri-lanka
- https://srilanka.factcrescendo.com/
- https://www.citizen.lk/FactCheck

**10. நீங்கள் எதையேனும் பார்த்தால், உண்மை சரிபார்ப்பவர்களை எச்சரிக்கவும்!**

ஹேஷ்டேக் தலைமுறை என்பது இளைஞர் அமைப்பாகும், இது உண்மையில் சமூக ஊடகங்களில் வெறுக்கத்தக்க உள்ளடக்கத்தை சரிபார்க்கிறது. நீங்கள் அவர்களை நேரடியாக தொடர்பு கொள்ளலாம்:

- www.hashtaggeneration.org
- hello@hashtaggeneration.org

**எதிர் பேச்சு**

வெறுப்புணர்வு அல்லது தீங்கு விளைவிக்கும் பேச்சுக்கு எந்தவொரு நேரடி பதிலும் அதை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

அவை பொதுவாக இரண்டு வடிவங்களில் வருகின்றன:

1. ாசெயலில்: ஒழுங்கமைக்கப்பட்ட எதிர்செய்தி பிரச்சாரங்கள்

2. ாஎதிர்வினை: தன்னிச்சையான.். இயற்கையான பதில்கள்

**மேலதிக தகவல்களுக்கு வாசிக்க :**

Wright, Lucas & Ruths, Derek & Dillon, Kelly & Saleem, Haji & Benesch, Susan (2017). Vectors for Counterspeech on Twitter. 57-62. 10.18653/v1/W17-3009.

**எதிர் பேச்சை நாம் எவ்வாறு வளர்ப்பது?**

வெறுப்பூட்டும் மற்றும் தீங்கு விளைவிக்கும் பேச்சை எதிர்க்க நீண்ட கால நீடித்த செய்திகள் தேவை. எதிர் செய்திகளை உருவாக்கும் வழக்கமான செயல்முறை இவ்வாறு காணப்படலாம்:

- திட்டமிடுதல்
    1. சிக்கலை அடையாளம் காணவும்
    2. உங்கள் பதில் முன் நடவடிக்கை.'. எதிர்வினை
    3. சூழல் பகுப்பாய்வை மேற்கொள்ளுங்கள்
    4. பார்வையாளர்கள் மற்றும் தளம் பற்றி ஆராய்ச்சி செய்யுங்கள்
    5. இலக்குகளை அமைக்கவும்: ஒட்டுமொத்த இலக்குகளை அமைத்தல் மற்றும் நுண் இலக்கு அமைப்பு
    6. காலவரிசையை உருவாக்கவும்
    7. பட்ஜெட்டை உறுதிப்படுத்தவும்

- தயாரிப்பு
    1. உங்கள் செய்தியை உருவாக்குங்கள்: தீய நோக்கம் கொண்ட நியாயப்படுத்தல்கள், விரோதமான மற்றும் மனிதநேயமற்ற அணுகுமுறைகளைத் தவிர்க்கவும்
    2. சரிபார்க்கப்பட்ட ஆதாரங்கள், சம்மதம் மற்றும் தனியுரிமையை மதிக்கவும்
    3. நீங்கள் பயன்படுத்த விரும்பும் வடிவம் அல்லது ஊடகத்தைப் புரிந்து கொள்ளுங்கள்
    4. பார்வையாளர்களின் மொழி மற்றும் அணுகும் வசதிகளைப் புரிந்து கொள்ளுங்கள்
    5. உங்கள் உள்ளடக்கத்தை உருவாக்குங்கள்
    6. உள்ளடக்கத்தை பரிசீலித்து இற்றைப்படுத்துங்கள்

- வெளியீடு
    1. தளத்தின் சுற்றுச்சூழலைப் பாருங்கள்
    2. தளத்திற்கேற்றவாறு உள்ளடக்கத்தைத் தனிப்பயனாக்குங்கள்
    3. நீங்கள் எப்போது பதிவிடுவீர்கள் மற்றும் எவ்வளவு நேரத்திற்கொரு தடவை பதிவிடுவீர்கள் என்பதை பகுப்பாய்வு செய்யுங்கள்
    4. உங்கள் உள்ளடக்கத்தை ஊக்குவித்து விளம்பரப்படுத்துங்கள்

- வெளியீட்டின் பின்னர்
    1. பார்வையாளர்களின் ஈடுபாட்டைப் பாருங்கள்
    2. பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்
    3. உங்கள் உள்ளடக்கம் எவ்வளவு நன்றாக இருந்தது என்பதைக் கண்காணித்து மதிப்பீடு செய்யுங்கள்

**வெற்றியை அளவிடுவதற்கான காரணிகள்**

- அசல் (வெறுப்புணர்வுப்) பேச்சை உருவாக்கிய கட்சிகள் தங்கள் நம்பிக்கைகளை ஆக்கபூர்வமாக மாற்றியுள்ளன.

- வெறுப்புணர்வுப் பேச்சுக்கும் எதிர் பேச்சுக்கும் இடையிலான பரிமாற்றத்தில் பங்கு கொண்ட மற்றவர்களின் நம்பிக்கைகள் மற்றும்∴அல்லது நடத்தைகளில் இதன் மூலம் நேர்மறையான தாக்கம் ஏற்பட்டுள்ளது.

- எதிர் பேச்சின் பார்வையாளர்கள் வெறுப்புணர்வுப் பேச்சைக் காணும்போது அல்லது அனுபவிக்கும்போது அதிக சந்தேகம், விடாமுயற்சி மற்றும் பிரதிபலிப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தத் தொடங்குகிறார்கள்.

- எதிர் பேச்சின் பார்வையாளர்கள் அவற்றை மேலும் பரப்புவதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**உங்கள் உள்ளடக்கத்தை உருவாக்க மற்றும் நிர்வகிக்க நீங்கள் பயன்படுத்தக்கூடிய இலவச மற்றும் பயனர் நேயதளங்கள்:**

**கிராபிக்ஸ் உருவாக்குதல், புகைப்படங்களை திருத்துதல், இலச்சினைகளை உருவாக்குதல்**

Canva https://www.canva.com/

GIMP https://www.gimp.org/

Pixlr https://pixlr.com/

Wondershare https://ps.wondershare.com/home

**stock புகைப்படங்களை அணுக**

Canva https://www.canva.com/

Pexels https://www.pexels.com/

Unsplash https://unsplash.com/

Pixabay https://pixabay.com/

Freepik https://www.freepik.com/home

Envato https://elements.envato.com/

**வீடியோ மற்றும் ஓடியோ தொகுப்பாக்கம்**

Avidemux http://avidemux.sourceforge.net/

Audacity https://www.audacityteam.org/

Wavosaur https://www.wavosaur.com/

Wevideo https://www.wevideo.com/

Kate's video toolkit https://kate-s-video-toolkit.informer.com/

Animaker https://www.animaker.com/

**போட்ஸ் (Bots)**

Cheap Bots, Done Quick! https://cheapbotsdonequick.com/

Artbot http://artbot.combinatorium.com/#!/tracery

The bot ideas generator https://matteomenapace.github.io/random-generatorgenerator/examples/bot-idea-generator/

**சமூக ஊடகங்களை நிர்வகித்தல்**

Hootsuite https://hootsuite.com/en-gb/

Buffer https://buffer.com/

MediaCMS https://mediacms.io/

## வளங்கள்

பின்வருபவை "வெறுப்புணர்வுப் பேச்சை எதிர்கொள்ளல்" தொடரின் போது இடம்பெற்ற பேச்சாளர்களின் எழுத்துக்கள் மற்றும் நேர்காணல்கள்.

### டாக்டர் ஜேம்ஸ் கோமஸ்

- தென்கிழக்கு ஆசியாவில் வெறுப்புணர்வுப் பேச்சு - புதிய வடிவங்கள், பழைய விதிகள்
  https://asiacentre.org/hate-speech-in-southeast-asia/

- ஆசிய ஜனநாயகத்தை அச்சுறுத்தும் புதிய வெறுப்புணர்வுப் பேச்சு விதிகள் https://www.bangkokpost.com/opinion/opinion/1953460/new-hate-speechrules-threaten-asian-democracy

### ஜெஹான் குணதிலக்க

- தீங்கு விளைவிக்கும் பேச்சை எதிர்கொள்ளல் : ஏன் அரசை நம்ப வேண்டும்? https://groundviews.org/2020/12/17/countering-harmful-speech-why-trustthe-state/
- இலங்கையில் வெறுப்புணர்வுப் பேச்சு: ஒரு புதிய தடை எப்படி தண்டனையின்றி நிலைத்திருக்கும்
  https://ohrh.law.ox.ac.uk/hate-speech-in-sri-lanka-how-a-new-ban-couldperpetuate-impunity/

### சாய்ஜாய் லியாங்புன்சாகுல்

- மியன்மாரில் நடக்கும் கொலைகளுக்கு பேஸ்புக் பொறுப்புக் கூற வேண்டுமா? -தளங்களின் வகிபங்கு
  https://www.youtube.com/watch?v=NAKm_OOo6UI
- தொழில்நுட்பம் மற்றும் பச்சாதாபம் எப்படி வாழ்க்கையை மாற்றும் https://www.youtube.com/watch?v=pVF1hUTVZow

### தீபாஞ்சலீ அபேவர்தன

- முஸ்லிம்கள் மற்றும் சந்தை ஏகபோகங்கள் https://groundviews.org/2021/04/21/muslims-and-market-monopoliesunpacking-a-prejudice/

- உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்: பயங்கள், தப்பெண்ணங்கள் மற்றும் ஒரு முரண்பாடு
  https://groundviews.org/2020/04/14/easter-sunday-attacks-phobiasprejudices-and-a-paradox/

**ஹசினி ஹபுதந்திரி**

- மோதல், சங்கமம் மற்றும் தொடர்ச்சி
  http://momac.lk/conflict-confluence-and-continuity/
- பெரிய உலகம்: தீவுகள், பெருங்கடல்கள் மற்றும் அதற்கு அப்பால்
  http://momac.lk/the-greater-world-islands-oceans-and-beyond/

**ஹார்'டெக் தலைமுறை**

- மனிஷா பால்ராஜ், செனல் வன்னியாராச்சி, நெத்மினி மெடவல, தர்ஷத கமகே
- இலங்கை: சமூக ஊடகங்கள் மற்றும் தேர்தல் ஒருமைப்பாடு
  https://drive.google.com/file/d/1qQKubeK1HtAtom3J5v2BKoQ5hToH9ma_/view
- இலங்கையில் சமூக ஒற்றுமை பற்றி பேஸ்புக் என்ன சொல்கிறது
  https://democracy-reporting.org/wp-content/uploads/2019/02/Social-Media-Analysis-draft-8-1-1.pdf
- கொவிட் -19 வெறுப்புணர்வுப் பேச்சை எதிர்கொள்ளல்
  https://www.youtube.com/watch?v=sbrTxESVUrA

## இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்

1982 முதல், இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் (ICES) உலகிற்கு ஆராய்ச்சிகள், கலந்துரையாடல்கள், ஆக்கபூர்வமான கலைகள் மற்றும் ஏனைய இடையீடுகள் மூலம் கருத்துக்களைப் பங்களிப்பாக வழங்கி வருவதுடன் கொள்கை நடைமுறைகளையும் அறிவித்து வருகின்றது.

**மீள்நல்லிணக்கம்,** நீதி, பால்நிலை மற்றும் மனித உரிமைகள் ஆகிய பரப்பிலே ICES ஒரு முக்கியமான செயற்படுனராக விளங்கி வருவதுடன், இலங்கையில் பால்நிலை சமத்துவம், பால்நிலைப் பல்வகைமை, சமய நல்லிணக்கம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான விடயங்கள் பற்றிய கொள்கை மற்றும் பொதுக் கற்பனை ஆகியவற்றினைக் கட்டமைப்பதிலும் செல்வாக்கு மிக்கதாகத் திகழ்ந்து வருகின்றது. சிறுபான்மையினரது உரிமைகள் மற்றும் குழும உரிமைகளை விருத்தி செய்து மேம்படுத்த நிறுவனம் பங்களிப்பு வழங்கியுள்ளதுடன் முன்னர் ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர்கள், பல்வேறு செயற்குழுக்கள் மற்றும் ஒப்பந்த அமைப்புக்களுடனும் நெருக்கமாகப் பணியாற்றியுள்ளது.

## Rosa Luxemburg Stiftung

Rosa Luxemburg Stiftung (RLS) என்பது ஜெர்மனியை தளமாகக் கொண்ட ஸ்தாபனமாகும், இது தெற்காசியாவிலும் உலகின் பிற பகுதிகளிலும் விமர்சன சமூக பகுப்பாய்வு மற்றும் குடிமை கல்வி ஆகிய விடயங்களில் பணியாற்றுகிறது. இது ஓர் இறையாண்மை, சோசலிச, மதச்சார்பற்ற மற்றும் ஜனநாயக சமூக ஒழுங்கை ஊக்குவிக்கிறது, மேலும் சமூகம் மற்றும் தீர்மானமெடுப்பவர்களுக்கு மாற்று அணுகுமுறைகளை முன்வைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆராய்ச்சி நிறுவனங்கள், சுயவிடுதலைக்கான குழுக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சிறந்த சமூக மற்றும் பொருளாதார நீதியை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்ட மாதிரிகளை உருவாக்குவதற்கான முயற்சிகளில் ஆதரிக்கப்படுகிறார்கள்.

# வெறுப்புணர்வுப் பேச்சை எதிர்கொள்ளல் : பாதுகாப்பான டிஜிடல் (Digital) வெளிகளை நோக்கி

"வெறுப்புணர்வுப் பேச்சை எதிர்கொள்ளல் : பாதுகாப்பான டிஜிடல் வெளிகளை நோக்கி" எனும் தலைப்பிலான இணையவழி கருத்தரங்கு தொடர் 2021 ஜூன் மாதம் முழுவதும் ICES இனால் நடாத்தப்பட்டது. 5 அமர்வுகளில், பேச்சாளர்கள் வெறுப்புணர்வுப் பேச்சுக்கு வழிவகுக்கும் சமூக-அரசியல் சூழல்கள், பேச்சை ஒழுங்குபடுத்துவது மற்றும் இலங்கையில் ஊடகங்களில் வெறுப்பு எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைப் பற்றி கலந்துரையாடினர். இந்தக் கருத்தரங்குத் தொடர், பங்கேற்பாளர்கள் பிரதான மற்றும் டிஜிட்டல் ஊடகங்களை அணுகும் போது அவர்கள் காணும் தகவலை மதிப்பிடுவதற்கான கருவிகள் மற்றும் தர்க்க ரீதியான சிந்தனை மூலம் வழிகாட்டும் இரண்டு தொழில்நுட்ப அமர்வுகளுடன் நிறைவடைந்தது.

இந்த வெளியீடு கருத்தரங்குத் தொடரின் போது பேச்சாளர்களால் சுட்டிக்காட்டப்பட்ட சில முக்கிய விடயங்களை முன்வைக்கிறது, மேலும் இந்த நிபுணர்களிடமிருந்து பெறப்பட்ட கூடுதல் வளங்களையும் தருகிறது. இதன் மூலம் வாசகர்களை ஆராயவும், அவர்களின் அறிவை மேம்படுத்தவும் மற்றும் அவர்களின் நாடுகள் மற்றும் சூழல்களில் வெறுப்புணர்வுப் பேச்சு, ஊடகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆகிய பிரச்சினைகளுடன் விமர்சன ரீதியாக ஈடுபட அனுமதிக்கிறது.

ISBN 978-624-5502-10-3

9 786245 502103

INTERNATIONAL
CENTRE FOR
ETHNIC STUDIES

Printed by Horizon Printing (Pvt) Ltd.